# “தமிழினத்தின் வாழ்வு [illegible]ம்வளத்துக்கும்காரணபுருஷர்நாவலரே —நீதியரசர்

Registered as a News paper in Ceylon விலை சதம் 15

ஈழநாடு

EELANADU

National Tamil Daily

தபால்பெட்டி எண்: 49
போன்: 389

மலர் 11
இதழ்:138
தேசிய தினசரி

யாழ்ப்பாணம் ஆனி 16 ரபி. ஆகி 14 திங்கட்கிழமை [30-6-69]




## ‘அரோகரா’ கோஷம் பஜனை ஒலி, மங்கள இசை முழங்க

# நல்லையிலே நாவலர் பெருமான் கோயில் கொண்டருளினர்

## நாவலரை நேரில் காணும் பேறுபெற்ற பூரிப்பு எங்கும்

யாழ்ப்பாணம், திங்கள்

“தர்மம் குன்றி அதர்மம் தலைதூக்கும்போது மீண்டும் அவதரிப்பேன்” என்று பரமாத்மா கீதையில் கூறியதுபோன்று தமிழ் மொழிக்கும் சைவத்துக்கும் இங்கு புதிய ஆபத்துத்தோன்றியுள்ள சமயத்தில் நாவலர்பெருமான் மீண்டும் அவதரித்திருக்கிறர் என்ற நம்பிக்கையும் புத்துணர்ச்சியும் யாழ்ப்பாணத்தில் திரண்டுள்ள மக்கள் மத்தியில் காணக்கூடியதாக இருக்கிறது. நாவலர் திருவுருவச்சிலை என்றபேச்சு மறைந்து நாவலர் பெருமானே யாழ்ப்பாணத்தில் எழுந்தருளியிருப்பதாகவே மக்கள் கருதுகிறர்கள். தமிழ் அரசர்களின் ராஜதானியாக விளங்கியதும் நாவலர் அவதரித்ததும், கந்தக்கடவுள் எழுந்தருளியிருப்பதுமான நல்லை நகரிலே முருகப்பெருமானின் தெற்குவீதியிலே அமைக்கப்பெற்றுள்ள அழகான மணிமண்டபத்திலே ஐந்தாங்குரவரான ஆறுமுகநாவலர் பெருமான் பக்தர்களின் அரோகரா கோஷம் ஒருபுறமும் பஜனைமறுபுறமும் மங்கள இசை மற்றொருபுறமுமாக ஒலிக்க நேற்றிரவு கோயில் கொண்டார். ஆயிரக்கணக்கான மக்கள் இந்த ஆனந்தக்காட்சியை கண்

யாழ்ப்பாணம், திங்கள்

‘கடந்த நூற்றுண்டில் சைவத்தையும் தமிழையும் சுதேச கலாச்சாரத்தையும் அந்நிய ஆட்சியின் ஆதரவு பெற்றவர்கள் நசுக்க முற்பட்டபோது அஞ்சாநெஞ்சனுக தன்னந்தனியாக அவர்களை எதிர்த்து போராடி எம் இனத்தின் உரிமைகளையும் பாரம்பரியத்தையும் நிலைநாட்டி ஒப்பற்ற தளபதி தன்னலமற்ற தலைவர் நாவலர் பெருமானேயாவார். எம் தமிழினத்தின் இன்றைய வாழ்வுக்கும் வளத்துக்கும் காரண புருஷராகத் திகழ்பவர் நாவலர் பெருமானே.’

நாவலர் மாநாட்டை நேற்று காலை ஆரம்பித்து வைத்து தலைமையுரை நிகழ்த்துகையில் சபையின் தலைவரான நீதியரசர் வி சிவசுப்பிரமணியம் இவ்வாறு தெரிவித்தார்.

### பொன்னுனதினம்

யாழ்ப்பாணம் திறந்த வெளியரங்கில் அமைக்கப்பட்ட விசேஷமான அலங்காரப் பந்தலின்கீழ் நாவலர் மாநாடு நேற்றுக்காலை ஆரம்பமானது. யாழ்நகர முதல்வர் திரு. எஸ். நாகராசா மாநகரசபை சார்பில் வரவேற்புரை நிகழ்த்துகையில் இன்றைய தினம்தமிழ் மக்களுக்கு ஒரு பொன்னுன தினம் என்று குறிப்பிட்டார்.

நீதியரசர் தமது தலைமையுரையில்மேலும் தெரிவித்ததாவது:

சைவமும் தமிழும் இந்நாட்டில் நிலைத்து நிற்பதற்காகத் தன் வாழ்வையே அர்ப்பணித்துப் பணிபல புரிந்த நல்லைநகர் நாவலர் பெருமானின் நினைவைப் போற்றி அவரின் நாமத்தையும் பணிகளையும் மேன்மேலும் பரப்புவதற்காக இன்று இங்கு கூடியுள்ளோம்.

தமிழினம் அவரைப் போற்றவில்லையே! அவர் புகழை உச்சத்துக்கும் ஏற்றவில்லையே என்ற குறைபாடு இன்றுடன்தீர்ந்து விட்டது. இன மத மொழி வேறுபாடுகளைக் கடந்து தேசமக்கள் அனைவராலும் நாவலர் இப்போது போற்றப்படுகின்ருர். கடல் கடந்து தமிழகத்திலும் இதன் எதிரொலிப்புக் கேட்கின்றது.

ஈழமணித் திருநாட்டின் தலைநகரான கொழும்பு மாநகரிலே சென்ற 24-ம் திகதி பிரதமரும் மற்றும் பல்வேறு சமூக, மத, அரசியல் தலைவர்களும் கலந்து கொண்டு நாவலருக்கு அஞ்சலி செலுத்திய வைபவமும் அதன் பின்னர்நடைபெற்ற தேசபவனியும் திருவுருவச் சிலைக்கு பல்வேறு இனமத

குத்துவிளக்கேற்றி தொடக்கிவைத்தார்.

காலையில் யாழ்ப்பாணத்தின் பல பகுதிகளிலுமுள்ள ஆலயங்கள் பலவற்றிலும் நடைபெற்ற விசேஷ பூசைகளுடனும் நல்லூரில் நடைபெற்ற சிலைப் பிரதிஷ்டையுடனும் விழா ஆரம்பமானது

மாநாட்டு மலரை சமர்ப்பணம் செய்த மாநாட்டுக் குழுத் தலைவரும் நாவலர் சபையின் கூட்டுப் பொருளாளருமான நா. இரத்தின சபாபதி தமது சமர்ப்பண உரையில் தெரிவித்ததாவது:

நாவலர் பெருமானைப் போற்றி அவர் புகழை பரப்புவதற்கும் அவர் ஆற்றிய பணிகளைச் சிறப்பாகத் தொடர்ந்து செய்வதற்குப் திட்டங்கள் பலவற்றை வகுத்துச் செயல்புரிந்து வரும் எமது ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் சபை இன்று நாவலர் பெருமானுக்குட பெருவிழா எடுக்கின்றது. சபை அமைக்கப்பட்டு ஓராண்டுக்குள் அன்னரின் திருவுருவச்சிலையை நிறுவவும் அதை ஒட்டி நான்கு நாள் சிறப்பு மாநாடு நடத்தவும் எமது சபைக்குச் சந்தர்ப்பம் கிடைத்துள்ளது. கடந்த 90 ஆண்டுகளாக நடைபெருத இந்த நிகழ்ச்சி இப்போது நிகழ திருவருள் பாலித்திருக்கின்றது.

இராமநாதபுரம் பொன்னுச்சாமித் தேவருடைய சபையில் நாவலர் செய்த பிரசங்கத்தை அவர் கேட்டு மகிழ்ந்து, மற்றை வித்துவான்களுக்கெல்லாஞ்செய்த விருதுகளிலுஞ் சிறந்த விருதை இவருக்கு அளித்தார். ஆறுமுகநாவலர் மதுரைத் திருஞான சம்பந்த சுவாமி யாதினத்துப் பண்டார சந்நிதிகளுடைய அழைப்பின்பேரில் மீனுட்சியம்மையார் சந்நிதானத்திலே பிரசங்கித்தபோது, அதனைக் கேட்ட அந்தச் சந்நிதானம் மிகுந்த ஆனந்தம் அடைந்து தாம் தரித்திருந்த ஆறு கட்டி சுந்தர வேடங்களைக் கையில் எடுத்துக்கொண்டு ‘‘இவைகளெல்லாம் எங்களுக்கேன்; சமய தாபனஞ்செய்யவந்த தங்களுக்கே ஏற்றவைகள்’’ என்று சொல்லி இவருக்கு அணிந்தது. கோயிலருச்சகர் மீனுட்சியம்மையாருக்குச் சாத்திய விபூதிப் பிரசாதமும் பரிவட்டமும்புட்பமாலையுங் கொண்டுவந்து இவருக்குச் சாத்தினர். இவர் இந்த ஆறு கட்டி சுந்தரவேடங்களைத்திரும்பப் பண்டார சந்நிதிகளுக்கே சமர்ப்பித்துவிட்டார். பண்டார சந்நிதி வாத்திய கோஷத்தோடு இவரைத் திருமடத்துக்கு அழைத்துக்

சங்க முடிவில் சிலர் எழுந்து ஆனந்தக் கூத்தும் ஆடினர்கள். வேறு சிலர் விழுந்து விழுந்து நமஸ்கரித்து விபூதி வாங்கிக்கொண்டார்கள். அந்த நாவலர் பெருமானை இன்று வணங்குகிறேம்‘ அவருக்கு சிலை எடுக்கிறேம் நான்கு நாள் மாநாடாத்தி அஞ்சலிசெலுத்கிறேம்.

வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த - ஈடும் எதிர்ப்பும் இல்லாத இவ்வைபவத்தின் தகுதிக்கும் பெருமைக்கும் சிறப்பூட்டும் ஓர் அங்கமாக நாவலர்பெருமானைப் புகழ்ந்தும் அவர் பணிகளைப் பலப்பல கோணங்களில் ஆராய்ந்தும், மற்றும் ஈழத் தமிழர்களின் பல்வேறுதுறை வளர்ச்சிகளைப் பிரதிபலித்தும் எழுதப்பட்ட விஷயங்களை அடக்கிய நாவலர் மாநாட்டு மலரை மகிழ்ச்சிப்பெருமிதத்துடன் நாவலர் பெருமான் திருப்பாதங்களில் சமர்ப்பிக்கின்றேன்.

மலர் வெளியீட்டுரை நிகழ்த்திய திரு. எம். ஸ்ரீகாந்தா தெரிவித்ததாவது:

மிகவும் இக்கட்டான சூழ்நிலையில் வெளிநாட்டவர்கள் நமது இனத்தையும், மதத்தையும் நசுக்கையில் தனித்து நின்று எதிர்த்து நமது சைவத்தையும் தமிழையும் காத்தவர் நாவலர் பெருமானே. இதனை கொழும்பில் நடைபெற்ற நாவலர் சிலை வழியனுப்பு விழாவில் பிரதமரே குறிப்பிட்டார்.

நாவலர் செய்த பணிகளில் அச்சுப்பணி மிக முக்கியமானதொன்ருகும். மிகவும் கஷ்டப்பட்டு ஓர் அச்சுத் தொழிற்சாலையை முழுமனதோடு நிறுவினர். கறையான்களுக்கு இரையாக விருந்த பல நூல்களை அச்சேற்றினர்.

இம்மலரை வெளியிடுவதிலும், சகல தேவைகளையும் நிறைவேற்றுவதிலும் மெய் கண்டான் அதிபர்திரு. இரத்தினசபாபதியின் மட்டற்ற ஆர்வத்தை எம்பால் மட்டுப்படுத்தவே முடியாது போய்விட்டது. இந்த மலரை இங்கு வெளியிட்டு வைப்பதில் நான் மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன்.

பாராட்டுரை நிகழ்த்திய திரு. மு. ஞானப்பிரகாசம் தெரிவித்ததாவது:

சைவத்தையும் தமிழையும் உயர்ந்தஅடிப்படையில் வைத்து தமிழினத்தை வாழ வைத்த பெருமான் நாவலராவார்.

இந்த விழாவைக் கொண்டாடி நாவலர் பெருமானைப் பூஜிக்கின்றேம். சிலை எடுக்கின்றேம். விழா எடுக்கின்றேம். இத்துடன் நாவலர் செய்த [illegible]ரும்பெரும் பணிக்கு நாம் கைம்மாறு

## ஜாதிக சம்பத சுவீப் முடிவுகள்

கொழும்பு, ஞாயிறு

நேற்று இழுக்கப்பட்ட 5வது ஜாதிக சம்பதசுவீப் சீட்டிழுப்பு முடிவுகள் வருமாறு:

### முதலாவது பரிசு

19 E 000507 ரூபா 150,000-00
அல்லது ஒரு காரும் ரூபா 111,350-16 சதம்

### இரண்டாம் பரிசு

17 R 000522 ரூபா 1,25,000-00
அல்லது ஒரு காரும் ரூபா 98,300-00

### மூன்றும் பரிசு

12 T 001546 ரூபா 100,000-00
அல்லது ஒரு காரும் ரூபா 73,725-00

தலா ரூபா 968-20 சதம் ஆறுதல் பரிசு பெறும் 200 டிக்கட்டுகள் விபரம் வருமாறு:-

| | | | |
|---|---|---|---|
| | | 21B000736 | 18B001565 |
| | | 06B000567 | 14B000967 |
| | | 07C001332 | 23C000494 |
| | | 16C001811 | 12C001800 |
| | | 24C001839 | 11C001137 |
| 22A000483 | 12A001617 | 21C001816 | 09C000644 |
| 13A001186 | 15A000641 | | |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலா ரூபா 968-20 சதம் ...
ஆறுதல் பரிசு பெறும் 200 டிக்கட்டுகள் விபரம் வருமாறு:-

| | |
|---|---|
| 22A000483 | 12A001617 |
| 13A001186 | 15A000641 |
| 11A000220 | 26A000720 |
| 07A001250 | 27A000935 |
| 01 A 000141 | |
| 18B000597 | 18B001976 |
| 19E000256 | 01E001349 |
| 22E000943 | 18E000087 |
| 14F000237 | 03F001948 |
| 17F000376 | 20F001843 |
| 10F000725 | 17F000574 |
| 17F001717 | 17F000689 |
| 06F001114 | 01F001867 |
| 28F000654 | 20F001824 |
| 21F001940 | 18F000262 |
| 13G001740 | 20G000527 |
| 15G001908 | 23G001676 |
| 16G000655 | 14G000352 |
| 22 G 000368 | |
| 23H001627 | 14H001864 |
| 26H001939 | 22H001017 |
| 10 H 000475 | |
| 24J001781 | 28J001356 |
| 12J001509 | 01J000829 |
| 20J000842 | 09J001564 |
| 08J001964 | 23J000278 |
| 16J001159 | 12J001053 |
| 13 J 000773 | |
| 06K000787 | 22K000419 |
| 12K001819 | 02K001163 |
| 18K000229 | 24K000440 |
| 22K000574 | 03K001050 |
| 24K001420 | 05K000981 |
| 14K001111 | 10K001008 |
| 11 K 000736 | |
| 16L000747 | 07L000901 |
| 26L000064 | 18L000677 |
| 07L001855 | 09L001847 |
| 13 L 000596 | |
| 14M000445 | 21M000596 |
| 07M000558 | 12M000298 |
| 23M001303 | 02M000100 |
| 02M000322 | 22M000721 |
| 22M001757 | 10M001698 |
| 21M001988 | 04M000449 |
| 02 N 001467 | |
| 09N001147 | 13N001333 |
| 14N001412 | 14N000567 |
| 27O000694 | 17O000870 |
| 06O000555 | 13O000667 |
| 13P000308 | 13P000097 |
| 11P001926 | 12P001689 |
| 01P000198 | |
| 25W000190 | 13W000006 |
| 26W001012 | 22W000425 |
| 20W000932 | 10W001810 |
| 28W000566 | |
| 28X001108 | 08X000133 |
| 03X000981 | 10X000511 |
| 09X000261 | 25X001108 |
| 03X000687 | 12X001625 |
| 27X000805 | 20X001930 |
| 03X001162 | |
| 19Y000810 | 06Y000644 |
| 14Y000839 | 19Y001346 |
| 01Y000098 | 12Y000230 |
| 12Y000276 | |
| 20Z000910 | 22Z000844 |
| 13Z000658 | |

| | |
|---|---|
| 06B000567 | 14B000967 |
| 07C001332 | 23C000494 |
| 16C001811 | 12C001800 |
| 24C001839 | 11C001137 |
| 21C001816 | 09C000644 |
| 18D000060 | 05D001552 |
| 25D000876 | 16D001640 |
| 19D001996 | 16D001103 |
| 17E000959 | 27E000069 |
| 06Q000048 | 17Q001007 |
| 25Q000349 | 13Q000020 |
| 15Q001854 | 18Q000608 |
| 28Q001467 | 28Q000219 |
| 05Q000582 | 03Q000850 |
| 26Q001229 | 13Q000023 |
| 26Q000227 | |
| 05R001721 | 13R001401 |
| 18R000980 | 17R001347 |
| 23R001676 | 21R001642 |
| 04R001689 | 06R000028 |
| 08R001296 | 16R001933 |
| 22R001600 | 09R001730 |
| 13S000199 | 24S001631 |
| 02S001616 | 26S000895 |
| 29S001107 | 28S001389 |
| 19T000757 | 29T000087 |
| 11T000463 | 27T001507 |
| 16T000489 | 21T001534 |
| 18T000169 | |
| 08U000975 | 14U000400 |
| 13U000331 | 13U001135 |
| 26U000053 | 04U000255 |
| 27U000033 | 23U000932 |
| 01V001654 | 19V001135 |
| 07V001385 | 25V000339 |
| 23V000844 | 02V000898 |
| 19V000841 | 01V001358 |

ஐந்தாங்குரவரான ஆறுமுகநாவலர் பெருமான் பக்தர்களின் அரோகரா கோஷம் ஒருபுறமும் பஜனைமறுபுறமும் மங்கள இசை மற்றொருபுறமுமாக ஒலிக்க நேற்றிரவு கோயில் கொண்டார். ஆயிரக்கணக்கான மக்கள் இந்த ஆனந்தக்காட்சியை கண்களில் ஆனந்தக்கண்ணீர் மல்ககண்டுகளிகொண்டனர்.

# 'மறுமலர்ச்சியும் புத்துணர்ச்சியும் அளிக்கும் முன்னேடிநிகழ்ச்சி'

(நமதுகாரியாலய நிருபர் எஸ். திருச்செல்வம்)

யாழ்ப்பாணம், திங்கள் இன்றையநாள் இலங்கை வரலாற்றில் ஒரு முக்கியமான நாளாகும். ஈழத்துச் சுதந்திரத்துக்கு வித்திட்ட மூவர்களில் ஒருவரான நாவலர் பெருமானின் சிலைநாட்டப்பட்ட இந்நாள் இலங்கை மக்களின் ஒரு பொன்னுளாகும். ஈழத்துத் தமிழ் மக்கள் அனைவரும் ஈடும் எடுப்புமில்லாத தமது தலைவருக்குச் சிலைநிறுவிய இத்தினம் சரித்திரப்பெருமைமிக்க தினமாகும், சைவத்தையும் தமிழ்க் கலாசாரத்தையும் பேணிக்காத்தளித்த நாவலர் பெருமானுக்கு சிலைநிறுவப்பட்ட இவ்வைபவம் சைவத்துக்கும் தமிழுக்கும்மீண்டும் மீண்டும் புத்துணர்ச்சியையும் மறுமலர்ச்சியையும் தோற்றுவிக்கப்போகும்முன்னேடியான ஒருநிகழ்ச்சியாகும்.''

நாவலர்பெருமானின் திருவுருவச்சிலையை கடந்தஇரவு திறந்துவைத்துப் பேசுகையில் ஆறுமுகநாவலர் சபைத் தலைவரான நீதியரசர் திரு. வி. சிவசுப்பிரமணியம் மேற்கண்டவாறு பேசினர்.

ஆறுமுகநாவலர் சபைக் கூட்டுப் பொருளாளரும், விழா இணைப்பாளருமான செனட்டர் திரு. ரி. நீதிராஜா வரவேற்புரை நிகழ்த்தி, சிலையைச் செதுக்கிய சிற்பக்கலைஞரான திரு மணிக்குப்பொன்னுடை போர்த்திக் கௌரவித்துப் பேசுகையில், சைவமும் தமிழும்வளர்த்த நாவலர் பெருமானுக்கு தமிழுலகம் அஞ்சலி செலுத்தக் கடமைப்பட்டதென்றும் சகல சமூக மக்களும் நாவலர் சிலைக்கு அஞ்சலி செலுத்தியதே ஒரு வரலாற்று நிகழ்ச்சியென்றும் குறிப்பிட்டார். திரு. எம். ஸ்ரீகாந்தா இவ்வைபவத்தைத் தொடக்கிவைத்தார்.

நீதியரசர் இதைத்திறந்து வைத்து மேலும் பேசியதாவது:-

சைவமும் தமிழும் நசிவுற்றிருந்தபோது, ஆறுமுக நாவலர் வீறுகொண்டெழுந்து பணியாற்றினர். அவருக்கு ஏற்பட்ட இன்னல்களையும் எதிர்த்து நின்று உண்மைக்காகவும் நியாயத்திற்காகவும் அவர் போராடினர் அன்று நாவலர் பெருமான் புரிந்த தன்னலமற்ற பணிகளின் பெறுபேருகத்தான் இன்று நாம் தமிழர்களாகச், சைவர்களாக இந்நாட்டில் வாழ்ந்து கொண்டிருக்கிறேம்.

நாவலர் பிறந்திலரேல், இந்நாட்டில் சைவம் வாழ்ந்துகொண்டிருக்கமுடியாது. தமிழ்மொழி இத்தனை சிறப்புக்குரிய நவீன மொழியாக வளர்ந்திருக்கமுடியாது. பழைய ஏட்டுச்சுவடியாக இருந்த அரும்பெரும் நூல்களைப் பரிசோதித்துப் பதிப்பித்து தமிழர்களுக்கு அளித்தவர் நாவலர் பெருமானே.

புகழ்மிக்க தேசத்தலைவர்களான சேர் பொன். இராமநாதன், சேர் பொன். அருணசலம் போன்ற அரசியல் தலைவர்கள் இந்நாட்டில் தோன்றுவதற்குக் காரணகர்த்தாவாக விளங்கி, அவர்களின் அரசியல பிரவேசத்தை ஊக்குவித்தவர் ஆறுமுகநாவலர் அவர்களே.

இங்கு நிறுவப்பட்டுள்ள நாவலர்சிலை அஞ்சலிசெலுத்துதவற்காக மட்டுமல்ல; அவருக்கு நாம் அஞ்சலி மட்டும் செலுத்திவிட்டால் போதாது. ஆயிரமாயிரம் ஆண்டுகளுக்குப் பின்பும் கொண்டு நாவலருக்கு அஞ்சலி செலுத்திய வைபவமும் அதன் பின்னர்நடைபெற்ற தேசபவனியும் திருவுருவச் சிலைக்கு பல்வேறு இனமத மக்களும் கொடுத்தவரவேற்பும் எமது தலைமுறையில் எந்தத் தலைவருக்கும் அளிக்கப்படாத கௌரவமாகும்.

இன்று மங்களகரமாக ஆரம்பமாகியுள்ள நாவலர் மாநாடு தமிழர்களின் பண்பாடு, கலை, இலக்கியம் சைவமதம் என்பனவற்றின் சிறப்பைக் கூறவும் இவற்றின் வளர்ச்சிக்குப் பாதையை மேலும் வளம்படுத்தவும் புதிய உணர்வையும் புத்துணர்ச்சியையும் ஏற்படுத்தவும் உதவும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

பண்டிதமணி கணபதிப் பிள்ளை அவர்கள் விழாவை

---

இந்நாட்டில் சைவமும் தமிழும்வாழவேண்டும். அதுவே அவரின் இலட்சியம். அதற்காகத் தமிழ் மக்களின் வாழ்வுக்குரிய கடமையையுணர்த்தி நாவலர் காட்டிய பாதையை நாம் அனைவரும் பின்பற்றி நாட்டின் சுபீட்சத்திற்கும், நமது இனத்தினது எதிர்காலப் பெருமைக்கும், சிறப்புக்கும் பணியாற்றுவதற்கு இன்று நாட்டப்பட்ட நாவலர்சிலை நம் எல்லோரது இதயத்திலும் உறுதியையும் நம்பிக்கையையும் ஊட்டும் புதிய சக்தியாகத் திகழட்டும்.

உயிரோடிருந்த வேளையில் தமிழ் மக்களுக்கும், சைவ மக்களுக்கும் உயர்வுக்குரிய கருத்துக்களை வழிகாட்டியது போல நாவலர் பெருமான்சிலை உருவில் நின்று எம்மினத்தின் வாழ்வுக்கும் வளத்திற்கும் என்றும் திசைகாட்டி ஆசீர்வதிக்கவேண்டுமெனப் பிரார்த்திக்கின்றேம்.

... பண்டார சந்நிதிகளுக்கே சமர்ப்பித்துவிட்டார். பண்டார சந்நிதி வாத்திய கோஷத்தோடு இவரைத் திருமடத்துக்கு அழைத்துக் கொண்டு சென்று சிலகாலம் அங்கே கூட வைத்திருந்தது. அந்த ஆதீனத்தின் வழிவந்த ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக பரமாசாரிய சுவாமிகள் இம் மகாநாட்டில் கலந்து கொள்வது பொருத்தமானதே. தருமபுர ஆதீனம் திருவண்ணாமலை ஆதீனம், காஞ்சிபுர ஆலயம் முதலிய இடங்களிலெல்லாம் இவர் பிரசங்கித்தபோது அங்குள்ள பண்டார சந்நிதிகளும் சைவாசிரியர்களும், பிறரும் பரவசமாய்ப் பெருமகிழ்ச்சியுற்றூர்கள். திருவண்ணாமலையாதீனத்துக்குக் குன்றக்குடி பண்டார சந்நிதிகள் பிரசங்க முடிவிலே இவரைச் சிவிகையிலேற்றி வாத்திய கோஷத்தோடு பட்டணப் பிரவேசஞ் செய்வித்தார்கள். சிலவிடங்களிலே பிர...

... டாடி நாவலர் பெருமானைப் பூஜிக்கின்றேம். சிலை எடுக்கின்றேம். விழா எடுக்கின்றேம். இத்துடன் நாவலர் செய்த அரும்பெரும் பணிக்கு நாம் கைம்மாறு செய்துவிட்டோம் என்று எண்ணிவிடக்கூடாது.

சைவம், தமிழ் என்னும் இரண்டையும் பிரதிஷ்டை செய்து அவரது இலட்சியங்களையும் கடைப்பிடிப்பதே அவருக்குச் செய்யும் பெருங் கைம்மாருகும்.

மேடையில் புலவர்மணி ஏ. பெரியதம்பிப்பிள்ளை, திருவாவடுதுறை ஆதீன தண்டபாணி தேசிகர், பண்டிதர் வீ. சி. கந்தையா, செனட்டர் திரு. ரி. நீதிராஜா, உதவி அரசாங்க அதிபர் திரு. ரி. முருகேசம்பிள்ளை, திரு. கே. லக்ஷ்மண ஐயர், வடபகுதி வித்தியாதிபதி திரு. எஸ். தணிகாசலம் ஆகியோர் உட்பட பல பிரமுகர்கள் அமர்ந்திருந்தனர்.

(கா. நி.)

## கொலைமுயற்சி வழக்கு: விசாரணையில் சாட்சி அழுதார்

அல்லைப்பிட்டி, திங்கள் வீ. கந்தசாமி, வி தம்பிஐயா ஆகியோர் அதேஇடத்தைச் சேர்ந்த தில்லையம்பலம் அப்பாத்துரை என்பவரை கத்தியால் வெட்டியும் இரும்புச் சலாகைகளாலும் பொல்லாலும் தாக்கி கொலைசெய்ய எத்தனித்ததாகத் தொடரப்பட்ட வழக்கு ஊர்காவற்றுறை நீதிபதி ஜனுப் முகமது ஜமீல் முன்னிலையில் விசாரணைக்கெடுத்துக்கொள்ளப்பட்ட போது தாக்கப்பட்டவரான தில்லையம்பலம் அப்பாத்துரை சாட்சியமளித்தார்.

அவர் சாட்சியமளிக்கும் போது கூறியதாவது; முதலாம்எதிரி எனது தலையில் கத்தியால் வெட்டினுர். இரண்டாமெதிரி இரும்புச் சலாகையால் எனது கையில் அடித்தார். நான் தரையில் சுருண்டு விழவே மூன்றும் எதிரி எனதுகையில் பொல்லால் தாக்கினுர். இக்கட்டத்தில் சாட்சி பலத்து அழத்தொடங்கினுர். அவர் தொடர்ந்து சாட்சியத்தில் கூறியதாவது: நான் குத்தகையாகப் பெற்ற காணியில் இரண்டாம் எதிரி இரண்டுமுழுநிலத்தைப் பிடித்துக்கொண்டார். இதுசம்பந்தமாக ஏற்பட்ட எல்லைத் தகராறை அடுத்து எதிரிகள் என்மீது பகைமை கொண்டிருந்தனர் என்றூர்.

மேல்விசாரணை அடுத்த மாதம் 26-ந் திகதி ஒத்தி வைக்கப்பட்டது.

---

## இவர்களுக்கு ஜூன்-1ல் ஓய்வு

யாழ்ப்பாணம், ஞாயிறு நாவலர்மகாநாட்டு இறுதி நாளான ஜூலை 1-ம் திகதியன்று மாநகர சபை ஊழியர்களுக்கு ஓய்வு அளிக்க வேண்டுமென நேற்று முன்தினம் நடைபெற்ற யாழ்ப்பாண மாநகரசபைக்கூட்டத்தில் உதவிமேயர் திரு. ஆ. துரைராஜசிங்கத்தினுல் கொண்டுவரப்பட்ட பிரேரணை ஏகமனதாக நிறைவேறியது. திரு. என்.ரி. செல்லத்துரை பிரேரணையை அனுவதித்தார்.

# அமெரிக்ககுரங்குபூவலம்வருகிறது

நியுயோர்க், ஜூன் 29 நீண்டகால எடையில்லாத் தன்மையின் விளைவுகளை ஆராய்வதற்காக 14 றுத்தல் நிறையுள்ள போனி என்னும் குரங்கு ஒன்றை அமெரிக்க விண்வெளி ஆராய்ச்சி நிலையத்தினர் விண்வெளிக்கு அனுப்பி வைத்துள்ளனர்.

முப்பது நாட்கள் விண்வெளியில் தங்கி பூமியை 469 தடவை சுற்றிவந்த பின் பூமிக்குத் திரும்பும் அடுத்தமாத மத்தியில் சந்திரனுக்குச் செல்லவிருக்கும் மூன்று அமெரிக்க விண்வெளி வீரர்களின் பிரயாணத்துக்குப் பயனுள்ள தகவல்களை இக்குரங்கின் விண்வெளிப் பயணத்திலிருந்து அறிந்து கொள்ள அமெரிக்க விஞ்ஞானிகள் திட்டமிட்டுள்ளனர்.

அடுத்தமாதமத்தியில் சந்திரன் செல்லும் விண்வெளிவீரர்களுக்கு அவர்கள் புறப்படுவதற்கு முதல் நாள் அமெரிக்க அதிபர் நிக்ஸன் விருந்தளிப்பார். அவர்கள் சந்திரனிலிருந்து திரும்பும்போது பசிபிக்கில் ஒரு கப்பலிலிருந்து அதிபர் கவனிப்பார். ஆனுலும் அவர்கள் வந்திறங்கிய பின் அவர்களுடன் அதிபர் கைகுலுக்கமாட்டார்.

சந்திரனிலிருந்து கிருமிகள் வந்தாலும் அவை பரவாமல் தடுக்கவே இந்த ஏற்பாடு.

வவுனியாவில் நள்ளிரவில்

## அடுத்தடுத்து நால்வருக்கு துப்பாக்கிச்சூடு;

வவுனியா, ஞாயிறு வவுனியாவில் மூன்று முறிப்பு என்ற இடத்தில் நேற்று நள்ளிரவு நடந்த துப்பாக்கிச் சூட்டுச் சம்பவமொன்றில் நால்வர் பலத்த காயமடைந்தனர். மற்றெருவர் கத்திக்குத்துக்கு இலக்கானுர். இவர்களில் நால்வர் வவுனியா ஆஸ்பத்திரியிலும் மற்றெருவர் ஆபத்தான நிலையில் அனுராதபுரம் ஆஸ்பத்திரியிலும் அனுமதிக்கப் பட்டுள்ளனர்.

திருக்கோணமலையிலிருந்து வாடகைக்கார் ஒன்றில் ஆறுபேர் வவுனியாவுக்கு வந்து கொண்டிருந்ததாகவும் மூன்று முறிப்பு என்ற இடத்தில் கார் நின்றதும் ஒருவர் அதிலிருந்து இறங்கியதும் அவர்மீது இனந்தெரியாதவர்கள் எங்கோ பதுங்கியிருந்து சுட்டதாகவும் சூடுபட்டதும் விழுந்தவரைத்தாங்கிப் பிடிப்பதற்காக காரிலிருந்து இறங்கிய மற்றவர்களும் ஒருவர் பின் ஒருவராக துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகியதாகவும் கூறப்படுகிறது. துப்பாக்கிச் சூடு வந்த திசையை நோக்கிச் சென்ற மற்றெருவர் கத்திக்குத்துக்கு இலக்கானுரென்றும் காயமடைந்த ஐவரும் ஆஸ்பத்திரிக்கு எடுத்துச்செல்லப்பட்டதாகவும் இவர்களில் ஒருவரின் நிலை மிக மோசமானதாக இருக்கவே அவர் அனுராதபுரம் ஆஸ்பத்திரிக்குக் கொண்டு செல்லப்பட்டதாகவும் அறியப்படுகிறது.

பொலிசார் புலன் விசாரணை செய்து வருகின்றனர்.

மாவிட்டபுரம்

## திருவிழா இம்முறை இல்லை

யாழ்ப்பாணம், திங்கள் மாவிட்டபுரம்கந்தசுவாமி கோவில் திருவிழா இவ்வருடம் நடைபெறமாட்டாது எனத்தெரியவருகிறது.

ஆலயப்பிரவேசம்சம்பந்தமாக ஒரு சமரசத்தீர்வுகாண்பதற்காக இந்துமாமன்ற பிரதிநிதிகள் துர்க்கா கோஷ்டி ஆலயத் தர்மகத்தாவைச் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்திய போது கோவில் தர்மகர்த்தா பாலஸ்தாபனம்நடைபெறவிருப்பதால் இம்முறை திருவிழா நடைபெறமாட்டாது என தெரிவித்ததாக அறியப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரிவிளம்பரம்

## கல்வி

ஜி. சி. ஈ. சாதாரணம் கலை விஞ்ஞானம் வர்த்தகம். மேல் தரம் கலை வர்த்தகம். தட்டெழுத்து, சுருக்கெழுத்து ஆங்கிலத்தில் தமிழில். சிங்களம், ஆங்கிலம் ஆரம்பத்திலிருந்து தினசரி காலை மாலை இரவு வகுப்புகள். யாழ் கல்லூரி, (Yarl Institute). 29 பருத்தித்துறை ரோட்டு, யாழ்ப்பாணம் 1213

முதிய ஆசிரியர் ஆங்கில மூலமும், தமிழ்மூலமும் வீடுகளுக்குச் சென்று சிங்களம் கற்பிப்பதற்குச் சித்தமாக இருக்கின்றார். முகவரி: டபிள்யூ. ஏச் சீ. சில்வா, 73, ஸ்ரேசன் ரோட், யாழ்ப்பாணம். 1216

கார் ஓட்ட பழக விரும்புவோர் உடனே சேரலாம். (Driving Lessons) சிங்களம் ஆங்கிலம் ஆரம்பத்திலிருந்து. யாழ். கல்லூரி (Yarl Institute) 29, பருத்தித்துறை ரோட், யாழ்ப்பாணம். 1214

## தேவை

அப்பளம் செய்வதற்கு அனுபவம் உள்ளவர்கள் தேவை. இருப்பிட வசதியும் அளிக்கப்படும். நேரில் வரவும். வீ. சண்முகேஸ்வரன், உரும்பராய் வடக்கு. உடும்பராய். 1217

## விளையாட்டுப் போட்டி முடிவுகள்

உடுப்பிட்டி, திங்கள்

கரவெட்டி விக்கினேஸ்வராக் கல்லூரியின் இல்லங்களுக்கு இடையேயான வருடாந்த விளையாட்டுப் போட்டி கல்லூரி அதிபர் திரு. சோமசுந்தரம் தலைமையில் நடைபெற்றது.

சிவப்பு (சின்னத்தம்பி) இல்லம் 181 புள்ளிகள் பெற்று முதலிடத்தையும், பச்சை (கேட்முதலியார் சின்னத்தம்பி) இல்லம் 157 புள்ளிகள் பெற்று இரண்டாமிடத்தையும், நீலம் (இராமசாமி) இல்லம் 119 புள்ளிகள் பெற்று மூன்றாமிடத்தையும், மஞ்சள் (கிருஷ்ணபிள்ளை) இல்லம் 80 புள்ளிகள் பெற்று நான்காவது இடத்தையும் சுவீகரித்துக் கொண்டன

சாம்பியன்களாகத்தெரிவு செய்யப்பட்டோர் விபரம் வருமாறு:

என். தங்கத்துரை, வீ. நிர்மலராசா, கே. கனகசிங்கம், எஸ். பாலசுந்தரம், ஏ. கந்தன், ஈ. புஷ்பராசா,

## விளையாட்டுப் போட்டி

புத்தூர், திங்கள்

யாழ். பரமேஸ்வராக் கல்லூரியின் வருடாந்த விளையாட்டுப்போட்டி அடுத்த மாதம் 5-ந் திகதி டாக்டர் திரு. எஸ் செல்வேந்திரன் தலைமையில் பிற்பகல் 3 மணியளவில் கல்லூரி விளையாட்டு மைதானத்தில் நடைபெறும்.

போட்டி 5 இல்லங்களுக்கிடையில் நடைபெறும்.

வெற்றி பெற்றவர்களுக்கு திருமதி செல்வேந்திரன் பரிசில்கள் வழங்குவார்.

## விளையாட்டு விழா

சுழிபுரம், திங்கள்

வலிகாமம் மேற்கு 2-ம் பிரிவு விளையாட்டுக் கழகங்களின் வருடாந்த விளையாட்டுப் போட்டியை நான்கு தினங்கள் வெகு சிறப்பாக நடாத்த விளையாட்டு உத்தியோகஸ்தர் திரு கா அரிச்சந்திரா ஏற்பாடு செய்துவருகின்றார்.

விழா அடுத்தமாத நடுப்பகுதியில் நடைபெறும்.

## 'தமிழர் சிந்திக்க வேண்டும்'

அல்லைப்பிட்டி, திங்கள்

'இன்று தமிழர்களுக்குப் பல கட்சிகள் தேவை தானா என்பதனை ஒவ்வொருவரும் சிந்தித்துப் பார்க்க வேண்டும். இன்று சகல துறைகளிலும் சிங்களமக்களினால் தமிழர் அடக்கப்பட்டு ஒடுக்கப்பட்டு ஒதுங்கி வாழும் நிலை ஏற்பட்டுள்ளது. இந்த வேளையில் நாம் நிதானமாகச் சிந்தித்துச் செயலாற்றவேண்டும். தமிழர் வீர சமுதாயமாக வாழ்வதற்கான வழிவகைகளை நாம் தேடிக்கொள்ளவேண்டும்'

இவ்வாறு கிளிநொச்சி எம். பி. திரு. கா. பொ. இரத்தினம், அல்லைப்பிட்டியில் நடைபெற்ற தமிழரசுக்கட்சிக் கூட்டத்தில் பேசுகையில் கூறினார்.

கூட்டம் அல்லைப்பிட்டி கிராமசபைத் தலைவர் தலைமையில் நடைபெற்றது.


வல்வெட்டித்துறை

ரஞ்சனா தியேட்டர்

தினசரி 6-30, 9-30.

பிரிபோயா, போயா காலை 10-30

எம். ஜி ஆர். — ஜெயலலிதா நடித்த

ஒளிவிளக்கு

(ஈஸ்ட்மென் கலர்)


## இன்றைய பலன்

ஆனிமாதம் 16-ம் திகதி

30-6-69

மேஷம்- நல்ல காரியங்களை ஆரம்பிப்பதற்கு இன்று பொன்னான நாள். தொழில் புரியும் இடத்தில் பாராட்டுதல்கள் கிடைக்கும்.

ரிஷபம்- மனதில் அமைதி குன்றும், எதிரிகள் எக்காளமிடுவர். மறைந்தநினைவுகள் மீண்டும் தலைதூக்கும், அமைதியே நன்று.

மிதுனம்- குளுமையான சம்பவங்கள் இடம் பெறும், வாழ்க்கையில் பசுமைதோன்றும், களஸ்திரவழியால் இலாபமும் கிடைக்கும்.

கடகம்- முன்னேற்றத்தில் தடை ஏற்படும், சிறுபிணி வாட்டும். ஆதரவு தருபவர்களுடன் பகைத்துக் கொள்ள வேண்டாம்.

சிம்மம்- நீண்ட நாள் கனவு இன்று நனவாகும். பெரியவர்கள் உதவிக்கு வருவர். புண்ணிய விருப்பு மேலிடும்.

கன்னி- உத்தியோகத்தில் உயர்வுடன், உரிமையும் கிடைக்கும். உற்சாகமாகக் கடமையாற்றுவீர்கள் உவகை சேரும்.

துலாம்- எதிர்பார்த்த பண வரவுக்கு இடமுண்டு, பூமியால் இலாபம் கிடைக்கும், புத்திர வழியாலும் நன்மை உண்டு.

விருச்சிகம்- பொருள் முடை தென்படும். கடன் படநேரிடும் கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்றமுடியாது போகலாம்.

தனுசு- அவசர புத்தியினால் விபரீதங்கள் விளையலாம். கோபத்தை அடக்கின் நிலைமை சீர்படும்.

மகரம்- போதுமென்ற மனமும், புண்ணியவிருப்பும் தலை தூக்கும். பொருள் வரவு திருப்திகரமாக இருக்கும். நல்ல தினம்.

கும்பம்- இருள் மண்டிக் கிடக்கும் இன்று, ஏமாற்றம்தாக்கும். குடும்பத்தில் உடல்நலம் பாதிக்கப்படலாம்.

மீனம்- தகுதியில் முன்னேற்றமுண்டு, தரமான வாழ்வும் கிட்டும். எதிரி

தகாத முறையில் நடக்கமுயன்றாராம்

## பொலிஸ் இன்ஸ்பெக்டர் மீது சட்ட நடவடிக்கை

நல்லூர், திங்கள்

புகார் செய்ய மன்னார் பொலிஸ் நிலையத்துக்குச் சென்ற கணவன் ஒருவரை பொலிஸ் நிலையத்தில் இருக்கச் செய்து விட்டு, அவரது வீட்டுக்குச் சென்று அவரது மனைவியான பொடிநோனா என்பவருடன் தகாத முறையில் நடக்க எத்தனித்ததாக மன்னார் பொலிஸ் நிலைய இன்ஸ்பெக்டர் திரு. பெரேரா மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படவிருக்கிறது.

இது சம்பந்தமான பூர்வாங்க விசாரணை முடிவுற்றுள்ளது. விசாரணையை மன்னார் பொலிஸ் உதவி அதிபர் திரு குணவர்த்தனா நடாத்தினார்.

'ஈழநாடு'

## பொதுஅறிவுப்போட்டி-(10)

சென்ற வாரத்து சரியான விடைகள்:-1. ஆர். திருநாவுக்கரசு, 2. 29,141அடி 3. ரி. பரராஜசிங்கம், 4, பைதாகரஸ், 5. டட்லி சேனநாயகா, 6. முதலாம் ஜோர்ஜ் மன்னர், 7 75 நாடுகள், 8. ஜோர்ஜஸ், பொம்பிடோ, 9. ஒட்டாவா, 10. ஆறுக்கும் உதவான்.

### பரிசு பெறுபவர்

ஒரே ஒரு நேயர் மற்றெல்லா நேயர்களையும் போட்டி ஆசிரியரையும் தோற்கடித்து முற்றிலும் சரியான விடைகள் எழுதி முதலாம் பரிசான பத்து ரூபாய் பெறுகிறார். அவர் பெயர்: எம். எல். எம். இக்பால், 14, மொகடீன் பள்ளி ரோட், முஸ்லிம் தெரு, யாழ்ப்பாணம்.

இரண்டாவது பரிசு எவருக்கும் அளிக்கப்படவில்லை. ஒரு பிழையுடன் பின்வரும் நேயர்கள்விடை அனுப்பியிருந்தார்கள்: வை. இராசரத்தினம், மந்துவில், கொடிகாமம். க. தங்கராசா, சாளம்பை, புலோலி மேற்கு. திருமதி தை. கணபதிப்பிள்ளை, அரசடி சந்தி, நல்லூர்.

### இந்தவாரக் கேள்விகள்

1. ஆறுமுக நாவலருக்கு 'நாவலர்' என்ற பட்டம் கொடுத்தவர் யார்? 2. நேபாள பிரதம மந்திரியின் பெயர் என்ன? 3. துருக்கியின் தலைநகரம் எது? 4 மனோன்மணியத்தின் ஆசிரியர் யார்? 5. சூரியனுக்கு மிக அண்மையிலுள்ள கோள் எது? 6. இந்தியப் பிரதமர் சமீபத்தில் எந்த நாட்டுக்கு விஜயம் செய்தார்? 7. மொஸ்கோ நகரத்தின் பழைய பெயர் என்ன? 8. மயோரியர் எங்கே வசிக்கிறார்கள்? 9. இலங்கையின் நிதி மந்திரி யார்? 10 நாவலர் சிலையை உருவாக்கியவரின் பெயர் என்ன?

### விகட விதைப்போட்டி- (10)

கூலிக்கு மாரடிக்கும் மேடைப் பேச்சாளரைப் பற்றி நேயர்கள் மிகவும்அற்புதமான கவிதைகளைப் புனைந்திருக்கிறார்கள், அவற்றில் சிறந்த கவிதைகளையாவது வெளியிடலாம் என்றால் இடம் போதாமலிருக்கிறது.

### பரிசுபெறும் கவிதை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்போ ஒரு கூட்டம்' என மனையாள் கண்

கூறிச் சென்று

## 16நாட்களின்பின் திரும்பினர்

அனலைதீவு, திங்கள்

இம்மாதம் 12ம் திகதி தொடக்கம் வகுப்புகளுக்குச் செல்லாது பகிஷ்கரித்து வந்த அனலைதீவு வடலூர் தமிழ்க்கலவன் பாடசாலை மாணவர்கள் சென்ற வெள்ளிக்கிழமை பாடசாலைக்குத் திரும்பினர்.

இங்கு கடமையாற்றிய தலைமையாசிரியர் ஒருவர் 10 நாட்களுக்குள் இடமாற்றம்செய்ததை ஆட்சேபித்து இவ் வேலைநிறுத்தம் நடைபெற்றது. இது பற்றி பல தடவை குறிப்பிட்ட பாடசாலை பெற்றோர் ஆசிரியர் சங்கம் வடபகுதி கல்வி அதிபதி திரு. தணிகாசலத்தையும். தீவுப் பகுதி எம். பி. திரு. நவரத்தினத்தையும் கண்டு தங்கள் கஷ்டங்கள் பற்றி எடுத்துக் கூறினர்.

விரைவில் தலைமை ஆசிரியர் ஒருவரை நியமிப்பதாக கல்வி அதிபதி வாக்குறுதி அளித்த சமரச பேச்சுவார்த்தையைத் தொடர்ந்து மாணவர்கள் பாடசாலைக்கு திரும்பியுள்ளதாக பெற்றோர் ஆசிரியர் சங்க செயலாளர் திரு வே. மயில்வாகனம் தெரிவித்தார், பகிஷ்கரிப்பு 16 நாட்க்ள்வரை நடந்தது.

## பொங்கல்விழா

வல்வெட்டித்துறை, திங்கள்

தொண்டமாறு செல்வச் சந்நிதி கோவில் வருடாந்தப் பொங்கல் இன்றுஇரவு நடைபெறும் இன்று இரவு சுவாமி வீதி வலம் வருவார்.

## மாணவர் கழக உறுப்பினர்

புத்தூர், திங்கள்

யாழ். பரமேஸ்வராக் கல்லூரி மாணவர் கலைக் கழகத்தின் முதலாவது கூட்டம் சென்ற புதன்கிழமை நடைபெற்று அதில் பின்வருவோர் கழகத்தின் அங்கத்தவர்களாக தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்: செல்வன் க. சுந்தரலிங்கம், உபதலைவர்: செல்வன். சு. பரராசசிங்கம், காரியதரிசி: செல்வன் இ. மயில்வாகனம், உபகாரியதரிசி: செல்வன் க. சிவபாதம், தனாதிகாரி: செல்வன் இ. தவராசா.

நிர்வாகசபை: மு. இராசேந்திரம், க. தவநாதன், சோ. சண்முகநாதன், சு மயில்வாகனம்.

போஷகர்: அதிபர் திரு. மு. ஞானப்பிரகாசம். மேற்பார்வையாளர்: திரு. இ. கேதீஸ்வரநாதன்.

## 'இறைவன் ஆடுவதன்மூலம் நாம் நடமாடுகின்றோம்'

### கரவெட்டியில் ஜனார்த்தனம்

உடுப்பிட்டி, திங்கள்

''ஒரு நாட்டில் ஓர் இனம் பெரும்பான்மையாக வாழ்ந்ததா அவ் வினம் மொழி, கலாச்சாரத்தில் முன்னேற முயற்சி மேற்கொள்ளாது. சிறுபான்மையாக வாழும் இனமே இன, மத, மொழிக்காகப் பாடுபடும். சைவ மதத்தவர்களுக்கென த்தனி மரபு உண்டு. நாம் கோவில் என்று மட்டும் கூறினால் அது சிதம்பரத்தைக் குறிக்கும். வைணவமதத்தவர் கோவில் என்றால் ஸ்ரீரங்கத்தைக் குறிக்கும் ''

மேற்கண்டவாறு திருவனந்தபுரம் டல்கலைக்கழகத் தமிழ் விரிவுரையாளர் திரு. ஜனார்த்தனம், கரவெட்டி தச்சன்தோப்பு விநாயகர் ஆலய 8-ம் நாள் உற்சவத்தில் பேசுகையில் கூறினார்.

திரு, ஜனார்த்தனம் ''நால்வரும் சைவமும்'' என்னும் தலைப்பில் உரையாற்றினார். அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது:-

இறைவன் ஆடுவதின் மூலமே நாம் நடமாடுகின்றோம். அவன் அசைவிலேயே உலக அசைவும் தங்கியுள்ளது. செம்மறியாடுகள் முன்பின் யோசியாது ஒன்றன்பின் ஒன்றாகச் செல்வது போல் போகக்கூடாது. வாழ்வாங்கு வாழவழிகாட்டும் நான்குபேருடன் செல்ல வேண்டும் என்பது தமிழ் நாட்டுப் பழமொழி.

மனிதனுக்கு உடல் வளர்ச்சியோடு, மன வளர்ச்சி, ஆத்துமவளர்ச்சி ஆகியவையும் ஏற்பட வேண்டும். மனிதனுக்கும் இறைவனுக்கும் உள்ள தொடர்பின் நீண்ட தூரத்தை நான்கு சமய குரவர்களும் குறுக்கிவைத்தனர். தமிழகத்தில் இந் நான்கு சமயகுரவர்களும் சைவத்துக்குப் புத்துயிர் ஊட்டினர்.

தோடுடைய செவியன் என்பதுபால்வழுவானதல்ல. அம்மையும், அப்பனுமாகிய இறைவன் இணைபிரியாது செவியுடன் கூடியதோடு போல் இருப்பதால் தோடுடைய செவியன் என அழைத்தனர். தோடு அணிவது பெண்பாலுக்கு உரிய ஒன்றாகக் கருதப்படவில்லை.

ஞானசம்பந்தர் பால்யப் பருவத்திலேயே முத்தி நிலையை எய்தியவர். சமய குரவர்கள்நால்வரும் செய்த தொண்டுகள் அவர்களுடைய தேவாரங்கள் மூலம் உணரக்கூடியதாக இருக்கின்றன.

இக் கூட்டத்திற்குத் தலைமை வகித்தஉபசபா நாயகரும் உடுப்பிட்டி எம். பியுமான திரு. மு. சிவசிதம்பரம் கூறியதாவது:.

### போராடியவர் நாவலர்

''இன்றைய சூழ்நிலைக்கும், ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் காலச் சூழ்நிலைக்கும் வித்தியாசம் இல்லை. அன்று எம் மதத்தைத்தாழ்த்திய மதம் வேறு, இன்று எம்மதத்தைத் தாழ்த்திவரும் மதம் வேறு. ஆறுமுகநாவலரின் துணிகரப் போராட்டங்கள்மூலம் சைவ மதம் பிறமத ஆக்கிரமிப்பிலிருந்து காப்பாற்றப் பட்டது.

நாம் யாழ்ப்பாணத்தில் தமிழுக்கும், சைவத்துக்கும் பாடுபட்டதற்காக மட்டும் நாவலருக்குச் சிலை எழுப்பவில்லை. அவர் அல்லும் பகலும் எமக்காக உழைத்துக் காட்டிய வழிகளைப் பின்பற்றி நடக்க எமக்கு ஞாபகம் ஊட்டும் முகமாகவே நாவலருக்குச் சிலை எழுப்பப்பட்டது.

நம்நாட்டிற்கும் தமிழ் நாட்டிற்கும் இடையில் பிரயாணக் கஷ்டங்கள் சொற்ப காலத்திலேயே ஏற்பட்டன. ஈழம்-தமிழகப் பாரம்பரிய தொடர்புகளை அரசியல் கட்சிகளால் கூட ஒருபோதும் அறுக்கமுடியாது. எந்த நூற்றாண்டிலும் இருநாட்டுப் பிணைப்பை எவராலும் பிளக்க முடியாது.'

## யாழ். மாநகரசபை அஞ்சலி

யாழ்ப்பாணம், திங்கள்

யாழ். மாநகரசபையின் மாதாந்த பொதுக்கூட்டம் மேயர் திரு. சி. நாகராஜா தலைமையில் வெள்ளியன்று நடைபெற்றபோது காலஞ்சென்ற அருணாசலம் மகாதேவாவுக்கும் வைத்தியர் திரு. கைலாசபிள்ளைக்கும் அனுதாபத் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

திரு. மகாதேவாவின் சேவைகள்பற்றியும் திரு. கைலாசபிள்ளையின் சேவை பற்றியும் உறுப்பினர் பாராட்டிப் பேசினர்.

செய்யப்பட்டோர் விபரம் வருமாறு:

என். தங்கத்துரை, வீ. நிர்மலராசா, கே. கனகசிங்கம், எஸ். பாலசுந்தரம், ஏ. கந்தன், ஈ. புஷ்பராசா, எஸ். பிரேமாவதி, கே. பாலசரஸ்வதி, எஸ். சரஸ்வதி.

தினசரி 6-30, 9-30.
பிரிபோயா, போயா காலை 10-30
எம். ஜி. ஆர். — ஜெயலலிதா
நடித்த
ஒளிவிளக்கு
(ஈஸ்ட்மென் கலர்)

ராணி
(யாழ்ப்பாணம்)
[தினசரி 3 காட்சிகள்]
ஜெய்சங்கர்
வரலக்ஷ்மி
நடித்த
உயிரா மானமா

வின்ஸர்
(யாழ்ப்பாணம்)
[தினசரி 4 காட்சிகள்]
✱ சிவாஜி
✱ பத்மினி
நடித்த
திருமால் பெருமை

இப்பொழுது நடைபெறுகிறது
கெப்பிட்டல் (கொழும்பு)
பிளாஸா (வெள்ளவத்தை)
விஜயா (மட்டுநகர்)
ஸ்ரீ கிருஷ்ணா (திருமலை)
மைலன் (கொழும்பு)
வெலிங்டன் (யாழ்ப்பாணம்)
ஆகிய திரைகளில்
ஸ்ரீதரின் கதை, வசனம், டைரக்ஷனில் உருவாகி
★ சிவாஜிகணேசன்
★ கே. ஆர். விஜயா
முத்துராமன்
கீதாஞ்சலி
நடித்த



நெஞ்சிருக்கும் வரை

கிங்ஸ்லி (கொழும்பு)
★ எம். ஜி. ஆர்.
★ சாவித்திரி
நடித்த
தேவரின்
வேட்டைக்காரன்

டிக கிடைக்கும் இன்று, ஏமாற்றம்தாக்கும். குடும்பத்தில் உடல்நலம் பாதிக்கப்படலாம்.

மீனம்- தகுதியில் முன்னேற்றமுண்டு, தரமான வாழ்வும் கிட்டும். எதிரிகள் பணிவர், எதிலும் வெற்றியுண்டு.

— சோதிடக்கலாநிதி —

திருமலை
க. வேலுப்பிள்ளை

## கிளிநொச்சியில் கடும் வரட்சி

கிளிநொச்சி, திங்கள்

கிளிநொச்சிப் பகுதியில் இவ்வருட மழையின்மையினுல் கிணறுகள் யாவும் வற்றி வரண்டுவிட்டதனுல் குடிநீருக்காக இப்பகுதிமக்கள் மிகுந்த கஷ்டமடைகிருர்கள். என்றுமில்லாதவாறு இவ்வருடம் மிகவும் கொடிய வரட்சியினுல் குடியேற்றக் கிராமங்களாகிய உருத்திரபுரம், தருமபுரம், கல்மடு, வட்டக்கச்சி இடங்களிலுள்ள மக்கள் குடிபெயர வேண்டிய நிலையில் உள்ளனர்.

இவர்கள் தங்களுக்கு குடிநீர் தந்துதவுமாறு கிளிநொச்சி ஆட்சிமன்றஉறுப்பினர் திரு. கா. பொ. இரத்தினத்திடம் கேட்டுள்ளனர்.

(அல். நிரு.)

ராஜா (யாழ்ப்பாணம்)
தினசரி 2-30, 6-30, 10-00.
பிரீபோயா, போயா 10 30
சிவாஜி - கண்ணம்பா
நடித்த
மனோகரா

வெஸ்லி சினிமா
மானிப்பாய்
தினசரி6-30, இரவு10-00
பிரிபோயா, போயா 2-30மணி
T. M. சௌந்தரராஜன்
நடித்த
அருணகிரிநாதர்
(புராணச்சித்திரம்)

MANOHARA
JAFFNA
Daily 4 Shows
Diane Tergens,
Johnny Monteiro
in
LOST BATTALION
(war film)

REGAL JAFFNA
Daily 4-45, 7 & 9-45 p.m
July Robert Horton,
in
DANGEROUS DAYS OF
KIOWA JONES
(Adults)

மலிருக்கிறது.

## பரிசுபெறும் கவிதை

இப்போ ஒரு கூட்டம்' என பனையாள் கண்
கூறிச் சென்று
முழுப்பனையின் பாலினெடு கல்லோயா ஸ்பெஷல்
அருந்திப்பின் அரைமதியில்
அப்பாவி மக்கள் நிறை அரங்குதனில் புகுந்து,
அருந்தியது வேலைபார்க்க
செயலில் ஒன்று சொல்லில் ஒன்றை உருகுவது
போலக் கண்ணீருடன் விளாசி
உலகையே ஏமாற்றும் கீழோனே! ஐயகோ! இப்
பாபம் உனை எப்பிறப்பில் வருத்துமே?

எழுதியவர்: அனுசூயா செல்வராசா, க.பொ.த. உயர்தரம் II கலை, வேம்படி மகளிர் கல்லூரி, யாழ்ப்பாணம்.

## பாராட்டுக்குரியவை

பாராட்டுக்குரிய கவிதை எழுதியவர்கள்: எஸ். எல். சவுந்தரநாயகம், இலுப்பைக்குளம், மகவாச்சி. உலகவதி செல்லர், சபாபதிப்பிள்ளை வீதி, சுன்ணுகம். பொ. ஸ்ரீராமச்சந்திரன், அன்னை இல்லம், செம்பியன்பற்று. கே கே. ரி. சர்மா, பிரதான வீதி, மாவனல்லை, ரி. ஆர். மனோகரன், சாந்தபவனம், இளவாலை.

## அடுத்த போட்டி

இந்த போட்டியை நடத்தும் ஆசிரியரைப்பற்றி சுமார் ஐந்து வரிகளுக்கு மேற்படாத ஹாஸ்யமான ஒரு கவிதையைத் தீட்டுங்கள் பார்க்கலாம். எங்கே உங்கள் சமர்த்து!

## நிபந்தனைகள்

ஒவ்வொரு போட்டிக்குரிய விடையும் அதற்குரிய கூப்பனுடன் இணைத்து அனுப்பப்படவேண்டும். விடைகள் 3-7-69 க்கு முன் பொது அறிவுப் போட்டி (10), 'ஈழநாடு', த பெ. இலக்கம் 49, யாழ்ப்பாணம் என்ற விலாசத்துக்கு வந்து சேரவேண்டும். ஒருவர் எத்தனை விடைகளையும் ஒரே உறையில் போட்டு அனுப்பலாம். ஆனுல் ஒவ்வொன்றுடனும் கூப்பன் இருக்கவேண்டும். போட்டிக் குழுவின் தீர்ப்பே முடிவானது.

கூப்பன்

'ஈழநாடு' விகடகவிதைப் போட்டி-(10)

பெயர் ...............................................

விலாசம்...............................................

...............................................

திகதி..................

கூப்பன்

'ஈழநாடு' பொது அறிவுப்போட்டி-(10)

பெயர் ...............................................

விலாசம்...............................................

...............................................

திகதி..................

### குறிப்பு:

8-வது விகட கவிதைப் போட்டியில் வெற்றி பெற்றவரின் பெயரைச்சென்ற வாரம் வெளியிடத் தவறிவிட்டோம். அவர் பெயர் இதுதான்:- கு. குகானந்தன், நயினுதீவு மத்தி, நயினுதீவு.

சோ. சண்முகநாதன், சுமயில்வாகனம்.


போஷகர்: அதிபர் திரு. மு. ஞானப்பிரகாசம். மேற்

பருவததிலேயே முத்தி

பார்வையாளர்: திரு. இ. கேதீஸ்வரநாதன்.

சேவைகள்பற்றியும் திரு. கைலாசபிள்ளையின் சேவை பற்றியும் உறுப்பினர் பாராட்டிப் பேசினர்.

என் டேவிட் பிரவுண் ட்ராக்டர்கள்?



தினமும் அதிகமதிகமான கமக்காரர்களும், விவசாயிகளும் டேவிட் பிரவுண் ட்ராக்டரை உபயோகிக்க ஆரம்பிக்கின்றுர்கள்.

காரணம் எங்கள்

உத்தரவாதம்

டேவிட் பிரவுண் அசல் மாற்றுறுப்புகள் எந்த வேளையிலும் கிடைக்குமென்பதற்கு

உத்தரவாதம்

இலங்கையெங்குமுள்ள எங்கள் விநியோகஸ்தர்கள் மூலம் விற்பனைக்குப் பின் சிறந்த சேவையைப் பெறுவதற்கு

உத்தரவாதம்

உங்கள் விவசாயப் பிரச்சினைகளை எங்கள் விற்பன்னர்குழு அக்கறையுடன் கவனிக்குமென்பதற்கு

உத்தரவாதம்

ட்ராக்டர் சாரதிகள் உழும் நேரத்தில் உற்சாகம் பெறுவார்களென்பதற்கு

ஒவ்வொரு டேவிட் பிரவுண் ட்ராக்டருக்குப் பின்னாலும் திறமை மிக்க தொழில் நுட்பமும், ... படி என்பதைத் தெரிந்துகொள்ள டேவிட் பிரவுண் ஸ்தாபனத்தாரின் ஒத்துழைப்பும், மற்றும் அரை நூற்றுண்டுக்கு மேல் வியாபாரத்திலும் சேவை முறையிலும் அனுபவமிக்க ரோலன்ஸ் ஸ்தாபனத்தாரின் ஒத்துழைப்பும் ஒருங்கே இணைந்துள்ளது.

D B
HOUSE OF R ROWLANDS

ரோலண்ட்ஸ் (ட்ராக்டர்ஸ்) லிமிட்டெட்

(ரோலண்ட்ஸ் நிறுவனத்தின் துணைக்கிளை) டரட் ரோட், கொழும்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமெரிக்க அதிபர் நிக்ஸன் ருமேனியா செல்கிருர்

## கம்யூனிஸ்ட் நாட்டு விஜயம் பற்றி பல இடங்களில் வியப்பு

### இந்தியா, பாகிஸ்தானுக்கும் போவார்

வாஷிங்டன், ஜூன் 29

**அமெரிக்க அதிபர் திரு. ரிச்சாட் நிக்ஸன் அடுத்தமாத பிற்பகுதியில் ஆசிய நாடுகள் பலவற்றுக்கு விஜயம் செய்யவிருக்கிருர். இந்தியா, பாகிஸ்தான், இந்தோனேஷியா, தாய்லாந்து, பிலிப்பைன்ஸ் ஆகிய நாடுகளில் பதிஞெரு தினங்கள் சுற்றுப் பிரயாணம் செய்தபின் கிழக்கு ஐரோப்பிய நாடுகளில் ஒன்ருன ருமேனியாவுக்கும் அவர் விஜயம் செய்வார்.**

கிழக்கு ஐரோப்பாவில் கம்யூனிஸ்ட் நாடு ஒன்றுக்கு அமெரிக்க அதிபர் ஒருவர் விஜயம் செய்வது இதுதான் முதல் தடவையாகும். அதிபர் நிக்ஸனின் ருமேனிய விஜயம் பற்றிய செய்தி வெளியானதும் பலநாடுகளிலும் தலைவர்கள் ஆச்சரியம் தெரிவித்தனர். ருமேனிய அதிபரின் அழைப்பின் மீதுதான் அதிபர் நிக்ஸன் ருமேனியா செல்லவிருப்பதாக செய்திகள் தெரிவித்தன.

நிக்ஸனின் ருமேனிய விஜயம் சோவியத் யூனியனுக்கு எதிரான தல்லவென்றும் ருமேனியாவில் இதர சோஷலிஸ நாடுகளின் தலைவர்களைச் சந்திக்கும் வாய்ப்புக் கிடைத்தால் அதிபர் நிக்ஸன் அதைப் பயன் படுத்திக் கொள்வாரென்றும் செய்திகள் தெரிவித்தன. திரு நிக்ஸன் ருமேனியா செல்வதற்கு முன்னர்சோவியத் பிரதமர் திரு. கொஸிஜினும் சோவியத் கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் திரு. பிரஸ்னேவும் ருமேனியாவுக்கு செல்வார்களென்றும் எதிர்பார்க்கப்படுகிறது

ஆசிய நாடுகளுக்கு விஜயம் செய்யும் அதிபர் நிக்ஸன் அந்நாடுகளின் தலைவர்களுடன் நடத்தும்பேச்சுவார்த்தைகளில் வியட்னும் பிரச்னையும் இடம்பெறுமென்ருலும் அதுதான் முக்கியமான விஷயமாக இருக்க மாட்டாதென்றும் வெள்ளை மாளிகை அதிகாரியொருவர் தெரிவித்தார். ஆசிய பிராந்தியத்தின் அமைதிக்கும் வளர்ச்சிக்கும் வழிவகுக்கக்கூடிய நீண்டகாலக் கொள்கைத் திட்டங்கள் பற்றித்தான் பேச்சுவார்த்தைகள் இருக்குமென்றும் அந்த அதிகாரி சொன்னுர்.

ஜூலைமாத மத்தியில் மூன்று அமெரிக்க விண்வெளி வீரர்கள் அப்பலோ கலத்தில் சந்திர மண்டலம் சென்று இறங்கித் திரும்பியதும் திரு. நிக்ஸன் தமது ஆசியசுற்றுப்பிரயாணத்தை மேற்கொள்வார். சந்திரன் செல்லும் அமெரிக்க வீரர்கள் ஜூலை 24-ந் திகதி பூமிக்கு திரும்புவார்களென எதிர்பார்க்கப்படுகிறது.

## பதட்லாவோ படைகளுக்கு வியட்நாம் துருப்புக்கள் உதவி

பாரிஸ், ஜூன் 29

லாவோசின் நடுநிலைமையையும் தேசிய ஒருமைப்பாட்டையும் பாதுகாப்பதற்கு இந்தோ சீனத்துக்கான ஜெனிவா ஒப்பந்தத்தைப் பேணி நடந்து கொள்ளவடக்குவியட்னுமை வற்புறுத்தும்படி லாவோஸ் பிரதமர் இளவரசர் சுவன்னபூமா, இந்தோ சீனத்துக்கான ஜெனிவா மகாநாட்டு கூட்டுத் தலைவர்களான பிரிட்டனையும் சோவியத் யூனியனையும் கேட்டுக் கொண்டார். லாவோசில் முக்கிய நகரமொன்றை இடதுசாரி பதட்லாவோ படைகள் கைப்பற்றியிருப்பதாகவும் இதற்கு வடவியட்நாம் துருப்புக்கள் உதவி செய்திருப்பதாகவும் இப்போது பாரிசில் தங்கியிருக்கும் பிரதமர் சுவன்னபூமா தெரிவித்தார். பதட்லாவோ படைகள் கைப்பற்றிய நகரை மீட்பதற்கு அரசாங்கத் துருப்புக்கள் அங்கு விரைந்துகொண்டிருப்பதாகவும் இளவரசர் சுவன்னபூமா தெரிவித்தார்.

## பாதுகாப்புக்கு பாக் அதிகம் செலவிடும்

கராச்சி, ஜூன் 29

பாகிஸ்தான் தனதுபாதுகாப்புச் செலவுக்காக தனது புதிய வரவு செலவுத் திட்டத்தில் அதிகதொகையை ஒதுக்கியிருக்கிறது.

புதியநிதிஆண்டில் கிடைக்கும் வருமானத்தில் பாதிக்குமதிகமான தொகை பாதுகாப்புச் செலவுக்கு ஒதுக்கப்பட்டிருக்கிறது. இத்தொகை சென்றவருடம் பாதுகாப்புக்குச் செலவிடப்பட்டதைவிட ஆறு சதவிகிதம் அதிகமானதாகும்.

## ப. ச. முடிவு

புலோலி ஞாயிறு

நெல்லியடி பட்டினசபை அடுத்த மாதம் தொடக்கம் நெல்லியடிபட்டினசபை எல்லைக்குள் இருக்கும் வர்த்தகஸ்தாபனங்கள் எல்லாவற்றுக்கும் சாப்புச்சட்டம் அமுலுக்கு கொண்டுவரவிருப்பதாக அறியப்படுகிறது.

காலை 9மணியளவில் வர்த்தகஸ்தாபனங்கள் திறந்து மாலை 6 மணிக்குபூட்டுமுறை அமுலுக்கு கொண்டுவரப்பட இருக்கிறது. இதற்காக வேண்டிய ஒழுங்குகளை வர்த்தகஸ்தாபனங்களுடன் பட்டினசபை பேச்சுவார்த்தை நடாத்தி வருகிறது.

# ஆந்திர மந்திரிகள் ஏழு பேர் ராஜிஞமா

ஹைதராபாத், ஜூன் 29

தெலிங்கானு தனிராஜ்யக் கோரிக்கைமீது ஆந்திராவில் தொடர்ந்து கிளர்ச்சி நடைபெற்றுவருகிறது. தெலிங்கானு தலைவர்கள் டாக்டர் சென்னுரெட்டி உட்பட மற்றும்பலர் கைதுசெய்யப்பட்டுக் காவலில் வைக்கப்பட்டிருப்பதற்கு ஆட்சேபம் தெரிவிக்குமுகமாக தொடர்ந்து மூன்ருவது தினமாக ஹைதராபாத்திலும் செக்கன்திராபாத்திலும் ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது. ஹைதராபாத் நகரில் சில கடைகள் திறந்திருந்தன. செக்கந்திராபாத்தில்பெரும்பாலும் கடைகளும் மற்றும் நிறுவனங்களும் மூடப்பட்டுக்கிடந்தன. போக்குவரத்துச் சேவைகளும் பெரும்பாலும் பாதிக்கப்பட்டன.

ஹைதராபாத்திலும் செக்கந்திராபாத்திலும் நேற்றிரவு 11 மணிமுதல் அதிகாலை 5 மணிவரை மீண்டும் ஊரடங்கு உத்தரவு அமுல்செய்யப்பட்டது.

செக்கன் திராபாத்தில் சரக்குரயில் வண்டியொன்று தடம்புரண்டது. ஆனுலும் எவருக்கும் காயமேற்படவில்லை. கைகாட்டி மரங்கள் சேதப்படுத்தப்பட்டன. ரயில்பாதைகளில் பாறைகள் வைக்கப்பட்டும் தண்டவாளங்கள் பெயர்க்கப்பட்டுமிருந்தன. கல்வீச்சு சம்பவங்களும் இடம் பெற்றன.

சிறைவைக் கப்பட்டிருக்கும் தெலிங்கானுத் தலைவர்களை விடுதலைசெய்ய ராஜ்ய அரசாங்கத்துக்கு உத்தரவிடுமாறு இந்திய உள்துறை அமைச்சர் திரு. வை. பி. சவானைச் சந்தித்த தெலிங்கானு பிராந்திய இயக்க தற்காலிக தலைவர் திரு. மதன் மோகன் கேட்டுக்கொண்டார். தெலிங்கானு நிலைமைபற்றி உள்துறை அமைச்சர் சரியாக உணர்ந்து கொண்டுள்ளாரென்றும் ஆந்திரப் பிரதேச அரசுத் தலைவர்களைச் சந்தித்து சிறை வைக்கப்பட்ட தலைவர்களை விடுதலைசெய்யுமாறு கேட்கும்படி அவர் தம்மிடம் கூறியதாகவும் திரு. மதன்மோகன் தெரிவித்தார்.

### மந்திரிகள் ராஜிஞமா

ஸ்ரீ கொண்டா லக்ஷ்மன் பாபுஜி மந்திரிப் பதவியை ராஜிஞமாச் செய்தார். ஸ்ரீ பாபுஜி இப்போது சிறையிலிருக்கிருர். நேற்று முன்தினம் தொழில்மந்திரிப் பதவியை ராஜிஞமாச் செய்த ஸ்ரீ குருமூர்த்தியை தெலிங்கானு மக்கள் பாராட்டி வாழ்த்தினர். செக்கந்திராபாத்தில் அவரது ஆதரவாளர்கள், ஊர்வலமாகச் சென்று 'குருமூர்த்திவாழ்க' என்று கோஷித்தனர். குருமூர்த்தி மந்திரிப்பதவியை ராஜிஞமாச் செய்யவேண்டுமெனக் கோரி செக்கந்திராபாத்திலுள்ள அவரது வீட்டின் முன் மறியல் நடைபெற்று வந்தது. ராஜிஞமாச் செய்ததும் மறியல் கைவிடப்பட்டது.

### முதன் மந்திரி ராஜிஞமா

ஆந்திரப் பிரதேச முதல் மந்திரி திரு. கே. பிரமானந்த ரெட்டி தமதுராஜிஞமாவை காங்கிரஸ் பார்லிமெண்டரி சபைக்கு அனுப்பிவிட்டார். இதைப்பற்றி ஆலோசிப்பதற்காக காங்கிரஸ் பார்லிமெண்டரிசபை ஜூலைமாதம் முதல் திகதி அவசரமாகக் கூடுகிறது. ஆந்திரப் பிரதேச காங்கிரஸ் கட்சியின் கூட்டம் ஜூலை 6-ந் திகதி நடைபெறும்.

"நிலைமை சீர்திருந்தி வருகிறது. இந்நிலையில் பார்லிமெண்டரி சபைக்கு அனுப்பியுள்ள எனது ராஜிஞமா இக்கட்டில்லாத முடிவுக்குவர சபைக்கு வசதிஅளிக்குமென்றும் நாடு, மாநிலத்தின் நலனுக்காகவும் எல்லா இடங்களிலும்நிதானமான ஆலோசனைக்குவழிசெய்யுமென்றும் எண்ணினேன்."

எனது ராஜிஞமா ஒழுங்கான சிந்தனைக்கு வழிகோலுமென்றும் கிளர்ச்சி அடியோடு நிற்குமென்றும் நம்புகிறேன். என்று முதன் மந்திரி பிரம்மானந்தரெட்டி ஓர் அறிக்கையில் தெரிவித்திருக்கிருர்.

திரு. பிரம்மானந்தரெட்டி ராஜிஞமாச் செய்வதென முடிவு செய்ததை காங்கிரஸ் அக்ராஸனர் திரு. நிஜலிங்கப்பா பாராட்டினுர்.

## 'நாவலர் பெருமான் பெரிய சங்கீத வித்துவான்'

### சித்தூர் சுப்பிரமணியபிள்ளை

உரும்பராய், திங்கள்

"யாழ்ப்பாணத்து நல்லூர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் பெருமான் பாடிய பாடல்கள் யாவும் வெகு அற்புதமானவை. பாடகர்களுக்கு உயர்ந்த சிந்தனையைக் கூட்டக்கூடிய தெய்வாம்சம் பொருந்திய பாடல்களைப் பாடியுள்ளார். கதிர்காம முருகன்மீது நாவலர் பாடிய பாடல்கள் மிகவும் சிறந்த கீர்த்தனங்களாகும். கதிர்காம முருகன் மீது நாவலர் பாடிய கீர்த்தனங்கள் ஆறுமே ஒரு முழுநேரக்கச்சேரிக்கு ஏற்றனவாகும். நாவலர் பெருமான் அவர்கள் பெரிய மகாவித்துவானும் உயரிய சங்கீத சாகித்திய கர்த்தாவும் ஆவார்."

நாவலர் பெருமானின் மகாநாட்டையொட்டி, நாவலர் பெருமானுற்பாடப்பெற்ற கதிர்காமக் கீர்த்தனங்கள் அடங்கிய நூல் பற்றிப் பண்டிதமணி நூல் வெளியீட்டுச்சபைக் காரியதரிசி திரு அ. பஞ்சாட்சரத்துக்கு சங்கீத கலாநிதி சித்தூர் சுப்பிரமணிய பிள்ளை அளித்த விசேஷ பேட்டியின்போது மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

'திரு. சுப்பிரமணியபிள்ளை தொடர்ந்து கூறுகையில், 'நாவலர் பெருமான் பாடிய கீர்த்தனங்களுக்கு வர்ணம், மெட்டு அமைப்பதில் ஈடுபடஎண்ணியுள்ளேன். சாவேரி, துர்சாவந்தி, சுருட்டி முதலிய அற்புத இராகங்களில் அக்கீர்த்தனங்கள் பாடப்பட்டுள்ளன. யான் எனது தாய் நாட்டுக்குச் சென்றதும் வர்ணம், மெட்டு முதலியவற்றை அமைத்து நூலாக வெளியிட உதவிபுரிவேன். நாவலர் ஐயாவின் கீர்த்தனங்களை எனது சங்கீதக் கச்சேரிகளிற்பாடுவேன் எல்லா

# கல்விக்காவலன் நாவலருக்கு யாழ்ப்பாண மக்கள் கைமாறு

## திருஉருவச்சிலையின் 'பாதங்களை கண்ணீர் தழுவிகழுவியது

வரவேற்பதில் தான் மகிழ்ச்சியடைவதாகவும்( இத்தொண்டாற்றிய ஆறுமுக நாவலர்சபையினருக்குதமிழ் மக்கள் நன்றி செலுத்தக் கடமைப்பட்டவர்கள் என்றும் கூறினுர்.

### ஊர்காவற்றுறையில்

### வேலணையில்

வேலணை ஊராட்சி மன்ற வாசலில் கிராமசபைத் தலைவர் திரு. வே. குலசேகர பிள்ளை, உதவி உள்ளூராட்சி ஆணையாளர் திரு. ஏ. ஏ. ஜோஸப் ஆகியோர் மாலையிட்டுப் பட்டாடை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருஉருவச்சிலையின் பாதங்களை
# கண்ணீர் தழுவிகழுவியது

யாழ்ப்பாணம், திங்கள்

**நாவலர் சிலை யாழ்ப்பாணத்தில் பல பகுதிகளுக்கும் எடுத்துச்செல்லப்பட்டபோது ஆங்காங்கு நாவலர் பெருமானுக்கு தெய்வீகமணம் கமழும் உற்சாக வரவேற்பளிக்கப்பட்டது. ஊர்மக்கள் ஆட்சிமன்ற உறுப்பினர், உள்ளூராட்சி மன்றத் தலைவர்கள், உறுப்பினர்கள் எல்லோரும் ஒரே குரலில் சைவமும் தமிழும் காத்த நாவலருக்கு தமது நன்றியை மலர் மாலைகளாலும் இதயத்திலிருந்து வழிந்த வார்த்தைகளாலும் தெரிவித்துக்கொண்டனர். இங்கு அவற்றைத் தருகிறோம்.**

## யாழ்ப்பாண நகரத்தில்

யாழ். நகரில் நாவலர் சிலையை வரவேற்ற வைபவத்தில் யாழ். நகர முதல்வர் திரு. எஸ். நாகராஜா பேசியதாவது:-

யாழ்ப்பாணத் தமிழ் மக்கள் சார்பிலும் மாநகர சபையின் சார்பிலும் நாவலர் பெருமானை வரவேற்பதில் நான் மகிழ்ச்சியடைகிறேன். இவர் தொண்டு அளப்பரியது.

அந்நியரான ஆங்கிலேயர் ஆட்சிபுரிந்த காலத்தில் அந்நிய மொழி, நாகரிகம் ஆகியவற்றில் அடிபட்டிருந்த எமது இனத்தை நாம் இச்சந்தர்ப்பத்தில உற்று நோக்கவேண்டும். நாவலர் அன்று தோன்றியதால் தான் நாட்டுப்பற்றும் தேசிய உணர்வும் வலுப்பெற்றது.

நாவலர் சைவத்துக்குத் தொண்டாற்றியதால் அவர் சைவத்துக்கு மட்டும் சொந்தம் என்றல்ல. எந்த மதமும் மனிதனை மனிதனுக்கவே தொண்டுசெய்கின்றது. தீமைகளை ஒழித்து, பண்பு, தொண்டு ஆகியவற்றை நிலைநாட்டவே வழிவகுக்கின்றது.

சகல மதங்களையும் சேர்ந்தவர்களும் இங்கு சேர்ந்தது ஒரு வரலாற்று நிகழ்ச்சியாகும் நான்கு பிரதான சமயம் நம்மிடையே இருக்கின்றது. ஆனல் இன்றைய காலக் கட்டத்தில் கடவுள் நம்பிக்கை அற்று, தெய்வ பக்தி மறைந்து சமயத்தினிடையே பகையை வளர்த்து, இன்றைய இளம் சந்ததி கடவுள் நம்பிக்கையற்ற நாஸ்திகக் கருத்துகள் விரக்தி மனப்பான்மையை வளர்த்துவருகின்றது. சமயங்களின் அடிப்படைத் தத்துவத்தை உற்றுநோக்கி ஒருமைப்பாட்டை உண்டாக்க வேண்டும்.

இந்நாடு பௌத்தர்களுக்குமட்டும்தான் சொந்தம் என்ற கருத்தை மக்களிடையே பரவவிடாமல் சகல மக்களு[illegible] சொந்தம் என்[illegible] செய [illegible]ல் காட்ட வேண்டும். சைவகர்களை பௌத்தர்களாக மதம் மாற்றும் நடவடிக்கையைச் சிலர் மேற்கொள்வதையும் இங்கு நான் குறிப்பிட விரும்புகின்றேன். கதிர்காமம் மலையில் நடந்த வன்சம்பவமும் கூட மனதுக்கு வேதனையை அளிக்கின்றது. ஆறுமுகநாவலர் சிலையை செதுக்கிய சபையினருக்கு நன்றி.

யாழ்ப்பாண ஆட்சிமன்ற உறுப்பினரான திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் பேசியதாவது:

90 ஆண்டுகளாக மறந்த பெரியாருக்கு, தமிழ் மக்கள் இன்று விழாஎடுப்பதும், சிலை எடுப்பதும், தமிழ்இனத்துக்கு வளமான எதிர்காலம் வந்துள்ளது என்பதை எடுத்துக்காட்டுகின்றது.

சென்னையில் அச்சுக்கூடம் நிறுவி, தமிழ்நாட்டில் பிரசங்கங்கள் செய்து, சிதம்பரத்தில் பாடசாலை கட்டுவித்ததால், நாவலருக்கு தமிழகத்திலேயே கூடிய பெருமை கிடைத்தது. அண்மையில் சென்னையில் நடைபெற்ற தமிழாராய்ச்சி மாநாட்டிலேயே அவரது சேவைகளை அறியக்கூடியதாகவிருந்தது.

யாழ்ப்பாணம் உதவி நகர முதல்வர் திரு. ஆ. துரைராஜசிங்கம் பேசுகையில், நாவலர்பெருமானது கொள்கைகள் சகலமத மக்களுக்கும் பொதுவானகொள்கைகள் என்றும் எந்த ஓர் இனத்தையும் இழிவுபடுத்தாமலே அவர் தமிழ்வளர்த்தாரென்றும் தெரிவித்தார்.

## நாவலர் பாடசாலையில்

நாவலர் பெருமானால் முதன் முதலாக ஆரம்பிக்கப்பட்ட யாழ்ப்பாணம் நாவலர் பாடசாலையில் அளிக்கப்பட்ட வரவேற்பில் பல பெரியார்களும் நாவலர் பாதங்களைக் கைகளால் ஒற்றிக் கண்ணீர் மல்கியகாட்சி உடம்பை புல்லரிக்கச் செய்தது.

மணிமண்டபம் போன்ற பச்சை ஓலைகளாலும் குருத்தோலைகளாலும், இளநீர், தாழங்காய், நுங்குஆகியவைகளால் அலங்கரிக்கப்பட்ட பந்தலில் நாவலர்பெருமான் சிலை சிலமணிநேரங்கள் நிறுத்திவைக்கப்பட்டது.

மாணவ மாணவிகள் மலர்களால் மாரிபொழிய, பக்திப்பாடல்கள்இசைக்க பாடசாலை அதிபர் பெருமானுக்கு மாலையிட்டு, உடுத்திராட்சம் மாலைபோட்டு, திருநீறு, சந்தனம்இட்டு அஞ்சலி செலுத்தினர்கள்.

மகாவித்தியாலய பழைய மாணவர்களும் மாலையிட்டு வழியனுப்பிவைத்தனர். நாவலர் வீதியில் நாவலர் வாழ்ந்த வீடு, நாவலர் அச்சகம் ஆகியவை வழியாக சிலை ஊர்வலமாகக்கொண்டு செல்லப்பட்டது.

## கோப்பாயில்

கோப்பாய்ச் சந்தியில் கோப்பாய் எம். பி. திரு. எஸ். கதிரவேலுப்பிள்ளை பேசுகையில் சொன்னது;

நாவலர்பெருமான் ஒரு ஞானியாவார். சைவமும் தமிழும் தழைத்திட அவர் மேற்கொண்ட தொண்டை நாம் இன்று எண்ணிப் பார்க்கவேண்டும். அவர் பெருமையுணர்ந்து செயற்பட முன்வரவேண்டும்.

## தீவுப்பகுதிகளில்

27-ந் திகதி முழு இரவும் நேற்றுகாலையும் காரைநகர், களபூமி ஆகிய இடங்களில் நாவலர் பெருமானின் சிலைக்கு சிறப்பான வரவேற்பை அப்பகுதி பொதுமக்களும், வர்த்தகர்களும் கொடுத்தார்கள்.

பக்திப் பரவசத்துடன்ஒரு பெண் ஆனந்தக் கூத்தாடினர். காரைநகர் இந்துக் கல்லூரி, யாழ்ரன் கல்லூரி களபூமிபிள்ளையார் கோயில், நாச்சிமார்கோயில், கனகசபாபதிப் பிள்ளை மடம் ஆகிய இடங்களிலெல்லாம் மலர்மாலையிட்டு அஞ்சலி செலுத்தினர்கள்.

வட்டுக்கோட்டை எம். பி. திரு. அ. அமிர்தலிங்கம் வலந்தலைச் சந்தியில்வைத்து சிலையை வரவேற்ருர்.

காரைநகர் கிராமசபைத் தலைவர் திரு. கா. க. விசுவலிங்கம் சிலையை வரவேற்றுப் பேசுகையில், செந்தமிழும் சைவமும் நிலைபெறச் செய்த ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் திருவுருவச்சிலையை காரைநகர் மக்கள் சார்பில் தொண்டாற்றிய ஆறுமுக நாவலர்சபையினருக்குதமிழ் மக்கள் நன்றி செலுத்தக் கடமைப்பட்டவர்களென்றும் கூறினர்.

## ஊர்காவற்றுறையில்

ஊர்காவற்றுறை துறைமுகத்தில் சிலை நேற்றுக்காலை 8-30 மணிக்கு வந்து சேர்ந்தபோது தீவுப்பகுதி எம். பி. திரு. வி. நவரத்தினம் சிலையை வரவேற்றுப் பேசியதாவது;—

நாவலர் பெருமானின் சிலை இலங்கையில் நிறுவ வேண்டுமென்ற சிந்தனையின் வரலாறு தென்னிலங்கைச் சிங்களச் சகோதரர்களுக்கும், அரசாங்கத்தினருக்கும், விஷமப் பிரசாரங்களில் ஈடுபடுவோருக்கும் ஒரு உண்மையைப் புலப்படுத்த வேண்டும்,

சென்றஆண்டு இந்தியத் தமிழகத்தில் நடைபெற்ற உலகத் தமிழாராய்ச்சி மகாநாட்டிலே யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஆறுமுகநாவலர் புறக்கணிக்கப்பட்டமை தான் இலங்கைத் தமிழர் மனதிலே இப்படியான சிந்தனைக்கு வித்ததாகும்.

ஊர்காவற்றுறை பட்டின சபைத்தலைவர் திரு. எஸ். இமானுவல் புரக்டர் கதிரவேலு உட்பட மற்றும் பல வர்த்தகப் பெருமக்களும் துறைமுகத்திலும், சந்தியிலும் சிலையை வரவேற்ருர்கள்.

ஊர்காவற்றுறைச் சந்தை மைதானம் அலங்கரிக்கப்பட்டு, அதிர்வெடிகள்வெடிக்கப்பட்டு நூற்றுக்கணக்கான மாலைகள் போடப்பட்டுநாவலர்சிலையை மக்கள் துதித்தார்கள்.

ஊர்காவற்றுறை சிவன் கோவிலில் விசேஷ பூசையுடன் சிலைக்கு வரவேற்பளிக்கப்பட்டது. இங்குள்ள கிறிஸ்தவக்கோவில் வாசல், கிறிஸ்தவக்கல்லூரிகள் ஆகியவற்றில் மகத்தான வரவேற்பு கொடுக்கப்பட்டது.

## நாரந்தனையில்

நாரந்தனைச்சந்தியில்கிராமசபைத்தலைவர் திரு.அருமைநாதரும் மற்றும் பிரமுகர்களும் சிலைக்கு மாலையிட்டனர்.

புங்குடுதீவுச்சந்தி நுழைவாசலில் வைத்து கிராமசபைத்தலைவர் திரு. கே. மதியாபரணமும், மக்கள் சேவாசங்கத்தலைவர் கு. வி. செல்லத்துரையும், திடீர் மரணவிசாரணை அதிகாரி திரு. எம். கதிரவேலு ஆகியோரும் மாலையிட்டு அஞ்சலிசெலுத்தினர்.

புங்குடுதீவு பிள்ளையார் கோவிலில் விசேஷ பூசை நடாத்தப்பட்டது.

புங்குடுதீவு கிராமசபைகளிலும் வரவேற்பளிக்கப்பட்டது. பெருங்காடு கந்தசாமி கோவிலிலும் சிவன் கோவிலிலும் பூஜைகள் அனுஷ்டிக்கப்பட்டது.

வாசலில் கிராமசபைத் தலைவர் திரு. வே. குலசேகரபிள்ளை, உதவி உள்ளூராட்சி ஆணையாளர் திரு. ஏ. ஏ. ஜோஸப் ஆகியோர் மாலையிடுப் பட்டாடை போர்த்தி வரவேற்றனர்.

வேலணை பிரபல வர்த்தகரான திரு மு. சிற்றம்பலமும் வேலணை முருகன்கோவில் வாசலில் திரு. கே. சதாசிவமும் மற்றும் பலரும் மாலையிட்டு அஞ்சலி செலுத்தி வழியனுப்பிவைத்தனர்.

## மண்கும்பானில்

மண்கும்பான் பிள்ளையார் கோயிலில் தேசியக்கொடிகளுடன் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை மாணவர்கள் அணிவகுத்து நின்று அஞ்சலி செலுத்தினர்.

## அல்லைப்பிட்டியில்

அல்லைப்பிட்டிச் சந்தியில் அல்லைப்பிட்டிப் பாடசாலைகளின் மாணவ மாணவிகள் அணிவகுத்து நிற்க அல்லைப்பிட்டி கிராமசபைத் தலைவர் திரு தவவிநாயகம் மாலையிட்டு வரவேற்ருர்.

## மண்டைதீவில்

மண்டைதீவுச் சந்தியில் அலங்கரிக்கப்பட்ட பந்தலில் மண்டைதீவு மகாவித்தியாலயம், கார்த்திகேசு பாடசாலை மாணவ மாணவிகள் பஜனைக் கீதம் ஒலிக்க, கிராமசபைத் தலைவர் திரு. கைலாசபிள்ளை மலர்மாலையிட்டு வழியனுப்பிவைத்தார்.

## நல்லூரில்

நல்லூர் நுழைவாயிலில் நாவலர் சிலை கொண்டுசெல்லப்பட்டபோது நகர உதவி முதல்வர் திரு. ஆ. துரைராஜசிங்கம், நல்லூர் தபால்நிலைய அதிபர் திரு. அ. கோபால், செங்குந்த இந்துக்கல்லூரி அதிபர் திரு. எஸ். பி. நடராஜா ஆகியோர் மாலையிட்டு வரவேற்றனர்.

சிகரம் கட்டப்பட்ட நல்லூர்ச் சந்திவரை பல வர்ணக் கடதாசிகளாலும், மங்கலப் பொருட்களாலும் சோடிக்கப்பட்டிருந்தது. செங்குந்த இந்துக்கல்லூரி, நல்லூர் மங்கையர்க்கரசி வித்தியாசாலை ஆகியவற்றின் மாணவிகள் இருமருங்கும் நின்று மலர்கள் தூவி வரவேற்ருர்கள்.

நகர மண்டபத்திலிருந்து நல்லூர்வரை மகளிர் கல்லூரிகள் உட்படப் பல கல்லூரிகளையும் சேர்ந்த சுமார் 4000 மாணவ மாணவிகள் அணிவகுத் நின்றதும் குறிப்பிடத்தக்கதாகும்.

மத்திய கல்லூரி வாசலில் அதிபர் திரு. இ. சபாலிங்கமும், இந்துக்கல்லூரி வாசலில் அதிபர் திரு. என். சபாரத்தினமும் மற்றும் பல அரசியல்பிரமுகர்களும், சமயப்பெரியார்களும் மாலை இன்றனர்.

மாறு கேட்கும்படி அவர் தம்மிடம் கூறியதாகவும் திரு. மதன்மோகன் தெரிவித்தார்.

## மந்திரிகள் ராஜினமா

ஆந்திரப் பிரதேச தொழில்மந்திரியும் மற்றும் தெலிங்கானப் பகுதியைச் சேர்ந்த ஏழு மந்திரிகளும் தங்கள் மந்திரிப் பதவிகளை ராஜினமாச் செய்துள்ளனர். சென்ற ஜனவரியில் தெலிங்கான கிளர்ச்சி ஆரம்பமானபின் முதலில்

யிட்டு வழியனுப்பிவைத்தனர்.

சுமார் 6 மைல் நீளமான பாதையும் அலங்கரிக்கப்பட்டிருந்தது. பல்லாயிரக் கணக்கான மக்கள் இங்கு பெருமானுக்கு அஞ்சலி செலுத்தினர். (கா. நி)

## வழக்கம்பரையில்

சுழிபுரம், ஞயிறு

நாவலர் பெருமான் தோன்றிய காலத்தில் சைவமும் தமிழும் எவ்வாறு அல்லற்பட்ட நிலையிலிருந்ததோ அதே நிலைமை இன்று நம் மத்தியில் காணக் கூடியதாகவுள்ளது. அன்று நாவலர் செய்த தொண்டினல் தான் சைவமும், தமிழும்காக்கபட்டன அதே போன்ற நாவலர் ஒருவர் இன்று எமக்கு தேவையாகும். சிலையைப் பார்க்கும் ஒவ்வோர் மனிதனும் நாவலர் போன்ற ஓர் பெருமகனை எமக்கு உருவாக்கித்தர வேண்டும்.

இவ்வாறு வழக்கம்பரை அம்மன் கோவில் முன்றலில் நாவலர் சிலையை வரவேற்றுப் பேசிய வட்டுக்கோட்டைத் தொகுதி ஆட்சி மன்ற உறுப்பினர் திரு. அ. அமிர்தலிங்கம் குறிப்பிட்டார்.

சுழிபுரம் கிராமசபைத தலைவர் திரு. சு. கந்தசுவாமி, ஜே. பி, தலைமையில் நடைபெற்ற வரவேற்பு விழாவில் புலவர் நா, சிவபாதசுந்தரனர். பண்டிதை பொ. பாககியம். யோகி கா. கார்த்திகேசு, பண்டிதர் அ. ஆறுமுகம். ஆகியோர் பேசினர். கூட்டுப் பிரார்த்தனை, பேச்சுப் போட்டியில் வெற்றி பெற்ற மாணவிகளின் பேச்சு ஆகியன நடைபெற்றன.

---

சுழிபுரம், திங்கள்

தொல்புரத்திலுள்ள சிதம்பரம் அம்பலவாண சுவாமி மானுமுதலியார் மடத்தில் எழுந்தருளியிருக்கும் வயிரவப் பெருமானுக்கு வரும் வெள்ளிக்கிழமை பொங்கல் விழா நடைபெறவிருக்கின்றது. பொங்கல் நடைபெறுவதற்கான சகல ஏற்பாடுகளையும் தர்மகர்த்தா சபையினர் கவனித்து வருகின்றனர்.

நாவலர் பெருமானின் மகாநாட்டையொட்டி, நாவலர் பெருமானுற்பாடப்பெற்ற கதிர்காமக் கீர்த்த

## கோப்பாயில்

கோப்பாய் சந்தியில் கிராமசபைத் தலைவர் திரு. ரி. பரமானந்தராஜா சிலைக்கு மாலையிட்டு வரவேற்ருர். கோப்பாய் கிறிஸ்தவக்கல்லூரி வாசலில் அதிபர் சண்முகநாதனும், ஆசிரியர்களும் மாணவர்களும் திரண்டு நின்று மலர்கள் தூவி வழிஅனுப்பிவைத்தனர்.

## நாவலர் அமைத்த பள்ளியில்

நாவலர் பெருமானல் 1872-ம் ஆண்டு நிறுவப்பட்ட கோப்பாய் நாவலர் பாடசாலையில் சிலைக்கு பிரமாண்டமான வரவேற்பு அளிக்கப்பட்டது. கோப்பாய் எம். பி. திரு. கதிரவலுப்பிள்ளை, பாடசாலை அதிபர் திரு. மு. வல்லிபுரம் ஆகியோர் சிலைக்கு மாலையணிவித்து வரவேற்று சிலையை பாடசாலை மண்டபத்துக்கு எடுத்துச் சென்றனர்.

பாடசாலை ஆசிரியர் திரு. நடராஜா வரவேற்புரை நிகழ்த்தினர். இவ் வைபவத்தில் திரு. கதிரவேலுப் பிள்ளை எம். பி. பேசியதாவது:

நாவலர் சிலையை செதுக்கி ஊர்வலமாக கொண்டுவரும் நாவலர்சபைக்குத் தமிழ் மக்கள் கடமைப்பட்டவர்கள். சிலை நிறுவுவதுடன் மட்டும் அவரது சேவைக்குக் கைமாறு முடிந்துவிடாது. அவரது இலட்சியங்களை நாம் நிறைவேற்ற முன்வரவேண்டும்.

நாவலர் நிறுவிய 7 கல்லூரிகளில் இதுவே இரண்டாவது பாடசாலையென்றும் தற்போது இருக்கும் பாடசாலைகள் யாழ்ப் பாடசாலையும், கோப்பாய் பாடசாலையும் தான் என்றும் குறிப்பிட்டதோடு, இப்பகுதி மக்கள் தங்கள் ஆரம்பக்கல்வியை இப்பாடசாலையிலேயே எடுப்பதால் பெருமையடைகின்ருர்கள் என்றும் சொன்னர்.

## இருபாலையில்

நாவலர் சிலை இருபாலைச் சந்தியில் முன்னள் கிராமசபைத் தலைவர் திரு. அருளம்பலத்தினல் மலர் மாலையிட்டு வரவேற்கப்பட்டது. கைக்குள தமிழ்ப் பாடசாலை மாணவர்கள் இருமருங்கும் நின்று பெருமானை வரவேற்றனர். சனசமூகநிலையத் தொண்டர்களால் ஒழுங்குகள் மேற்பார்வை செய்யப்பட்டது. கிராம சபைத் தலைவர் திரு. பரமானந்தராசா சொற்பொழிவாற்றினர்.

வர்ணம், மெட்டு முதலியவற்றை அமைத்து நூலாக வெளியிட உதவிபுரிவேன். நாவலர் ஐயாவின் கீர்த்தனங்களை எனது சங்கீதக் கச்சேரிகளிற்பாடுவேன் எல்லா வித்துவான்களும் குறித்த கீர்த்தனங்களைப்பாடி நாவலரை நினைத்துக்கொண்டு கதிர்காமக் கந்தனின் அருளைப்பெறவேண்டும் என்ருர்

---

# பொலிஸ் கான்ஸ்டபிள்
## தற்காலிக வேலைநீக்கம்

நல்லூர், திங்கள்

வடபகுதி பொலிஸ் அதிபர் திரு. ஆர். சுந்தரலிங்கம் பளைப் பொலிசைச் சேர்ந்த கிருஷ்ணகோபால் என்றகான்ஸ்டபிளைத்தற்காலிக வேலைநீக்கம் செய்துள்ளார்.

பளைப் பொலிசைச் சேர்ந்த இன்னும் நான்கு பொலிஸ் உத்தியோகஸ்தர்கள் திடீர் இடமாற்றத்துக்குள்ளாவார்களென தெரியவருகிறது. பலரின் புகார்களைத் தொடர்ந்தே இந்த இடமாற்றம் நடைபெறுகிறதென பொலிஸ் வட்டாரம் இன்று தெரிவித்துள்ளது.

பளைப் பொலிஸ் பகுதியில் பொலிஸ் கான்ஸ்டபிள் கிருஷ்ணகோபாலுக்கும் வேறு மூவருக்குமிடையில் நடைபெற்ற பலத்த கைகலப்பில் 40 வயதுடைய சிவசம்பு மரணமானதை அடுத்து கிருஷ்ணகோபால் என்பவரை றிமாண்டில் வைக்குமாறு சாவகச்சேரி மாஜிஸ்திரேட் உத்தரவிட்டது தெரிந்ததே.

---

# செபமாலைமாதா திருநாள்

உரும்பராய், திங்கள்

நவாலி புனித பேதுரு — பாவிலு ஆலயத்தில் எதிர் வரும் ஆடிமாதம் 2-ந் திகதி பரிசுத்த செபமாலை மாதா திருநாள்சிறப்பாகக்கொண்டாடப்படவிருக்கிறது.

கோயில்முன்றலில் அமைக்கப்பட்ட அலங்கார பீடத்தில் திவ்ய பூசைப் பலியும் தொடர்ந்து திருச்சுரூபஊர்வலமும் நடைபெறும்.

---

# கரவெட்டியில்

யாழ்ப்பாணப், திங்கள்

நாவலர் சிலை ஊர்வலமாக வியாழக்கிழமை 5 மணியளவில் சாமியன் அரசடியை வந்தடைந்தபோது கரவெட்டி இளம் வாலியர் சங்கத்தினர் திரு. பொன் குமாரசாமி தலைமையில் நாவலர் சிலையை வரவேற்றனர். திரு. குமாரசாமி சிலைக்கு மாலை சூட்டி மரியாதை செலுத்தினர் நாவலர் பெருமானின் சேவையிணைப் பற்றி உரை நிகழ்த்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மணிவாக்கு

'முற்றிலும் இருள்சூழ்ந்த நிலைமை இருக்கும் போது தன் திட்டங்களிலும் உத்திகளிலும் ஒருவருக்குள்ள நம்பிக்கை உண்மையில் சோதனைக்குள்ளாகிறது.

...மகாத்மா காந்தி

ஈழநாடு

Eelanadu National Tamil Daily

Telegram: "EELANADU" Jaffna.

Post Box: 49, Jaffna. Telephone: 389.

யாழ்ப்பாணம், சௌமிய வருஷம் ஆனி மாதம் 16-ந் திகதி (30 6 69)

## சைவ சமூக மறுமலர்ச்சி

நல்லூரிலே மீண்டும் நாவலர் பெருமான் கோவில் கொண்டுவிட்டார் திருவருட் செயலால் இந்த வைபவங்களெல்லாம் மிகச் சிறப்பாகவும் வெற்றிகரமாகவும் நடந்துள்ளன. நாவலர் மறைந்து 90 வருடங்களுக்குப்பின், மீண்டும் அவர் உயிர்த்தெழுந்து, தாழ்ந்துள்ள சைவ சமூகத்தைத் தட்டி எழுப்பி அதற்குப் புத்துயிரளிக்கமுன் வந்து விட்டாரென்றேதோன்றுகின்றது.

சைவ சமூகத்திலே தர்மம் குன்றி அதர்மம் மலிந்து, அதை நலியச்செய்யும்காலத்தில் இறைவன் தக்க பெரியோர்களை அனுப்பிவைத்து, சைவ சமூகத்தைக் காப்பதாகவும் அவ்விதம் சைவத்தைக் காக்க அவதரித்தவரே நாவலர் பெருமானென்றும் மதுரை குருமகா சந்நிதானமவர்கள் அறிவுறுத்தினுர்கள். நாவலரவர்கள் பிறந்திராவிடில், ஈழத்தில் மட்டுமல்ல தமிழகத்திலும்கூட இன்று சைவமும் சைவ சமுதாயமும் இருந்திருக்குமா என்பது மிகவும் சந்தேகம்.

நாவலர் அவர்கள் மறைந்து சுமார் ஒரு நூற்றண்டுக்குப் பின்இங்கு சைவசமூகம்உயிர் வாழ்கின்றதெனினும், அதற்கு உற்சாகமோ, நம்பிக்கையோ இல்லை. சைவர்களிலேயே சிறப்பாக வாலிபஉலகத்தின் நம்பிக்கையிழந்து, நாஸ்திகர்களாகி வருகின்றனர் தமிழ்மொழிக்கு இங்கு ஏற்பட்டுள்ள ஆபத்தையும் அதற்கேற்பட்டுள்ளசிறுமைகளையும் விளக்கத்தேவையில்லை. இந்தஅவலநிலைக்குமுக்கிய காரணம், குருமகாசந்நிதானம் அவர்கள் கூறுவது போல் வெளியாரல்லர், சைவ சமூகத்தவர்களேயாவர். சைவநெறிப்படி சைவசமூகத்தவர் கட்டுப்பாடாக ஒழுகிவந்தால், அந்தப் பண்பின்படி அறவாழ்க்கை வாழ்ந்துவரின், இவ்விதமானகேடு இந்தச்சமுதாயத்துக்கு ஏற்பட்டிருககமுடியாது. இனி என்னவோ என்று ஏங்கித்

சைவ சமயத்துக்கு ஏற்பட்டிருந்த ஆபத்தைத் தடுக்க அன்று நாவலர் அவதரித்தார். அந்த ஆபத்து தடுக்கப்பட்டதென்றுலும் சைவ சமுதாயத்துக்கு, நாடு அரசியல் சுதந்திரம் பெற்றபின் ஏற்பட்டுள்ள புதிய ஆபத்துக்களை நீக்கும் வழிதெரியாது அது திகைக்கின்றது இப்போது இச்சமூகத்துக்கு நல்வழிகாட்ட சமூக சீர்திருத்த வீரரான நாவலர் பெருமான் மீண்டும் வரவேண்டுமென்ற பேரார்வத்தாலேயே அவரது சிலை ஸ்தாபன விழாவை இவ்வளவு சிறப்பாகத் தமிழ், சைவ சமுதாயம் கொண்டாடுகின்றது. அன்று அவரை எதிர்த்தவர்களும், எதிர்ப்புப் பிரசாரம் செய்தவர்களும் இன்றில்லை என்றுலும் அவர்களது சந்ததிகள் பெரிதும் மனம்மாறி, இந்த விழாவில் ஒத்துழைத்து அவருக்கு அஞ்சலி செலுத்துவது வரவேற்கத்தக்கது.

இந்தத் திருவிழா உற்சாகமெல்லாம் புஸ்வாணம்போல் இத்துடன்மறைந்துவிடாமல், சமூகத்துக்கு பயன்அளிக்கப் பார்த்துக்கொள்ளவேண்டும். இவ்விழாவில் ஒத்துழைத்த பல பல தலைவர்களும் தங்கள் சுயநல வேற்றுமைகளை ஒதுக்கி வைத்து, நாவலர் பெருமானின் பெயரால் சமூகத்தின் மேலான நன்மைகளைக் கருதி தொடர்ந்து ஒத்துழைக்கவேண்டியதவசியம். இல்லாவிடில், இத்தனையும் வெறும் போலி வேஷமாகி பயனற்றுப்போய் விடுவதாக இருக்கும். பொதுமக்களும் இவ்விஷயத்தில் தொடர்ந்து அக்கறை காட்டி, தங்கள் சொந்தவாழ்வைசமயநெறிப்படி, அன்பை அடிப்படையாகக் கொண்டு வாழ முற்பட்டால், நாவலர் பெருமானின் உள்ளக்கிடக்கை நிறைவேறவும், தமிழும் சைவமும் மீண்டும் மேல்நிலையடையவும்வழி பிறப்பது உறுதி. இதற்கு நல்லூரில் மீண்டும் கோயில் கொண்ட நாவலர்பெருமான் துணைநிற்பாரென்று நம்புவோம்.

# 'நமக்குவழிகாட்ட நாவலரின் ஆத்மசக்தி உதயஞ் செய்துள்ளது'

— பண்டிதமணி

(நேற்றுக்காலை யாழ்ப்பாணம் திறந்தவெளி அரங்கு அலங்காரப் பந்தலில் நாவலர் மாநாட்டை ஆரம்பித்து வைத்து பண்டிதமணி ஆற்றிய உரை இங்குதரப்படுகிறது)

ஆனைமுகன் ஆறுமுகன்
அம்பிகைபொன்
னம்பலவன்
ஞானகுரு வாணிபதம்
நாடு.

சிவசக்தியாகிய திருவருள் விநாயக பெருமானுய், சிவசுப்பிரமணிய சுவாமியாய், பல்வேறு மூர்த்தமாய் நம்மைப் பாதுகாத்து வளர்த்தபடி இருக்கின்றது.

பேதித்து நம்மை வளர்த்
தெடுத்த பெய்வளைதன்
பாதத் திறம்பாடி
யாடேலோ
ரெம்பாவாய்

என்கின்றது திருவாசகம்.

திருவருளை முன்னிட்டுக் கொண்டு நாவலர்பெருமானின் நற் சிந்தனைகளுக்கும் நல்ல நோக்கங்களுக்கும் நன்றியும் வணக்கமும் செய்வோமாக.

கனம் பொருந்திய தலைவருள்ளிட்ட யாவருக்கும் எனது அன்புகனிந்த வணக்கம்.

1864ஆம் ஆண்டில் ஒரு தினம். மதுரைத் திருஞானசம்பந்த ராதீனத்தில் நாவலர் பெருமான் ஒரு சைவப் பிரசங்கஞ் செய்தார். அப்பொழுது உபய சந்நிதானங்களும் ஆனந்தம் கைம்மிக்கு.

மகா சந்நிதானம் தமது திருச் செவிகளில் அணிந்திருந்த சுந்தரவேடங்களைக் கழற்றி நாவலர் பெருமானுடைய செவிகளி லணிய, சின்னச் சந்நிதானமும் தாமணிந்த ஆறு கட்டிகளைக் கழற்றி அவ்வாறு செய்தது.

இது தொண்ணூற்றைந்து வருடங்களுக்கு முன் நடந்தது. அந்த ஆதீன பரம்பரையில் வந்த இப்பொழுதை மதுரை யாதீனத்து மகாசந்நிதானம், யாழ்ப்பாணத்துக்கு விஜயஞ்செய்து, இன்று மாலையில் நல்லூரில் நடைபெறும் சிலைத் திறப்பு விழாவைச் சிறப்பிப்பது, நாவலர்பெருமானின் மகிமையை மேன்மேலும் சிந்திக்க வைப்பதாய் அமைந்திருக்கிறது.

ஒரு காலத்திலே தேவாரத் திருமுறைகள் வழக்கு அருகி மறைந்து போயின. சோழப் பேரரசர் ஒருவர், திருமுறைகள் மண்ணுல் மூடுண்டு சிதம்பரத்திலே ஓரிடத்தில் மறைவாய்

நல்லைத் திருமுருகன் திருவீதியிலே, ஆறுமுகப் பெருமானின் திருக்கோயிலை நோக்கியவாறே அப்பெருமானை அஞ்சலி செய்து கொண்டே நல்லைநகர் ஆறுமுகநாவலர் பெருமான் அமர்ந்திருப்பார். வேலும் மயிலுந் துணை என்கின்ற அருமந்த வாக்கியத்தைக் கந்தபுராணம் முற்றுப்பெறுகின்ற இடத்தில் அமைத்து, கந்தபுராணத்தையும் கச்சியப்பப் பெருமானையும் உச்சிமேல் வைத்துப் பூசிக்கச் செய்த நாவலர் பெருமான், அழகுக் கழகு செய்யும் கலைப்பொகிஷமான மணிமண்டபத்தில் நமக்கு என்றும் வழிகாட்டியாய் நம் நோக்கஙகள் முளைகொண்டு வளர அபயம் அளித்து அமர்ந்திருப்பார்.

மங்களகரமான இந்த வைபவத்துக்கு முன்னே பேராசிரியர் வைத்திய கலாநிதி அ. சின்னத்தம்பி அவர்கள், மறைந்தும் மறந்தும் போன நாவலர்பெருமான் கருத்துக்களை நூற்பரப்பிற் காணவைப்பார்கள்.

உலகம் கருத்துவேற்றுமைகளாகிய அலைகள்மோதுகின்ற பெரியதொரு சமுத்திரமாயிருக்கின்றது. நாமொவ்வொருவரும் ஒருவருககொருவர் கருத்து வேற்றுமை யுடையவர்களாயிருக்கின்ருேம். அப்படியிருந்தும் ஒருமையுற்று இங்கு குழிமியிருக்கின்ருேம். நாவலர் பெருமானின்ஆத்ம சக்தி காந்தசக்தி படைத்ததாய் எங்கும் மின்னலைகளை வீசி யாவரையும் ஒருமை செய்யும் வண்மை படைத்ததாய் இருக்கின்றது. அதற்குக் காரணம், நாம் வாழும் இந்த உலகில் நாவலர் பெருமான் வாழ்க்கை நடத்தவில்லை. அப்பெருமான் வாழ்ந்த உலகுநீதி என்கின்ற உலகு.

நீதி என்ற வார்த்தையில் அடங்காத தர்மம் இல்லை. மத மாற்றத்துக்கென்றே அணிவகுத்து வந்த பாதிரியார், நாவலர் பெருமானுடன் பதினுன்கு வருடம் நெருங்கிப்பழகி, அப்பெருமானின் நீதிக்குத் தலைவணங்கி, 'மதகுரு' என்று பெருமானைப் போற்றுவாராயின், பெருமானின் ஆத்மசக்தி நம்மையெல்லாம் ஈர்த்து ஒருமை செய்வதில் நூதனம் இல்லை.

நாவலர் பெருமானின் ஒவ்வொரு வார்த்தையும் ஒவ்வொரு மூச்சும், தம்மை சமன்செய்துகொண்டு ஆராய்ந்து சிந்திப்பவர்களுக்கு, நாவலர் பெருமான் வள்ளுவரின் வழித்தோன்றல் என்பதைத் தெட்டத் தெளியக் காட்டுவனவாயிருக்கும்.

நாவலர் பெருமானின் பவனிசென்று முற்றுமிடம் மிக்க விசேஷம் படைத்தது. தொண்ணூற்றைந்து வருடங்களுக்குமுன், 1874-ம் ஆண்டிலே நாவலர் பெருமான் தமது 'ஐந்தாண்டுத் திட்டம்' முதலியவைகளைச் சிந்தித்த இடம் அந்தஇடம். இன்னும் ஐந்து வருடத்தில் நூறும்ஆண்டு. அந்த நூறும் ஆண்டில் நாவலர் பெருமானின் திட்டங்கள் பூர்த்தியாய் வளர்ந்துகொண்டிருக்கும் என்பதற்கு அறிகுறியான ஆரம்பவிழா இக்கால்கோள் விழா, இன்று தொடக்கம் அடுத்து நடைபெறும் விழா அனைத்தும் ஆரம்ப விழாவேயாம். 1974-ம் ஆண்டில் நடாத்தும் நூற்றுண்டுப் பெருவிழாவுக்கு இப்பொழுதை விழாக்கள் ஆரம்ப விழாக்களேயாம்.

மங்களகரமான இவ்விழா ஆல்போல் தழைத்து, கற்பக தருப்போல நிலைத்து யாவருக்கும் இனிமை செய்து, என்றும் இளமையும் புதுமையும் பெருக்கி நிலவுவதாக என்று, என்றும் இளையோனுகிய திருமுருகனைப் பிரார்த்திப்போமாக.

நாவலர் பெருமான் பணியில்யாவரும் ஈடுபட்டுழைப்பதற்கும் ஊக்கம் மேன்மேற் கிளர்தற்கும் எல்லாம் வல்ல இறைவன் திருவருள் பெருகுவதாக.

பத்து வருடங்களாக இங்கு வராத மதுரை குருமகா சந்நிதானமவர்களை, நாவலர் பெருமான் வரவழைத்துவிட்டார்கள். நல்லூரிலே பெருமான் அவர்கள் கோயில் கொள்ளுகையில் முதல் முதல் ஈழத்துக்குச் செய்த மேலான அருட் செயலாகும் இது.

ஈழத்து சைவ உலகத்துக்கு நல்லவழி காட்டக் கூடிய ஒரு தலைவர் இன்றில்லை. அதனுல்தான் சமய சம்பந்தமாக ஏதாவது சின்னச் சிக்கலோ சந்தேகமோ ஏற்பட்டால், அதை சுமுகமாகத் தீர்த்துக் கொள்ள முடியாமல் பொலிஸ், நீதிமன்றங்கள், தடியடி, உண்ணுவிரதம், சத்தியாக்கிரகம் முதலியவை ஏற்பட்டு சிறிய சிக்கலும் மிகப் பெரியதாகி இங்கு சைவ சமூகம் நாடும், உலகமும் நகைக்கும் இழிநிலைக்கு வந்துவிட்டது.

இவ்வித அவலநிலையில் செல்லாமல், இங்கு சைவ சமூகத்துக்கு நல்லவழி காட்டவே சைவசமய

## ஐயாறன் எழுதுவது

முதல் குரவரான திருஞான சம்பந்தரின் பெயரால் மதுரையிலே உள்ள ஆதீனத்தின் குருமகாசந்நிதானத்தை நாவலர் பெருமான் அழைத்து வந்துள்ளாரென்றே உணருகின்றேன்.

0 0 0

ஈழத்திலே இம்முறை அவர்கள் சுமார் இரண்டு வாரங்கள் தங்கியிருப்பாரென்று தெரிகிறது. நல்லூரிலுள்ள கிளை ஆதீனமடத்தில் அவர்கள் தங்கியிருந்து, ''சமயதீட்சை, விசேஷ தீட்சை முதலியன அளிப்பதுடன், யாரும் சைவசமயத்தில் சேர விரும்பினுல், அவர்கள் விருப்பத்தையும் நிறைவேற்றவும் தயாராக இருப்பதாக அவர்கள் பத்திரிகைகள்மூலம் விடுத்துள்ள விசேஷ செய்தியில் தெரிவித்தார்கள்.

மற்றச் சமயத்தவர்களை மதம் மாறும்படி அவர் கேட்பதில்லை ஆனுல்யாரும் விரும்பிக் கேட்டால் அவர்களின் விருப்பத்தை நிறைவேற்றி அவர்களை சைவர்களாக்கி வரவேற்பதாயும், மதுரையிலே ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் இந்தப் பணி நடைபெறுவதாயும், இவ்விதம் ஏராளமானவர்கள் மீண்டும் இந்துக்களாகி வருவதாகவும் அறிந்தேன்

ஆலயப் பிரவேச விஷயத்தைப்பற்றிக் கேட்டதற்கு, தாம் பூர்வாசிரமத்திலே 1944-ல் கொழும்பு ஜிந்துப்பிட்டி முருகன் கோயில் நிர்வாக அதிபராக இருக்கையில் இந்துக்கள் மட்டுமல்ல, எந்தச் சமயத்தவரும், நாட்டினரும் தரிசனம் செய்ய விரும்பினுல் வேறுபாடின்றி அவர்களை அனுமதித்ததாகவும், எல்லா மக்களிலும் இறைவன் குடிகொண்டதாலும், எல்லாரும் இறைவனின் குழந்தைகளானதாலும் அவர்களில் யாரையும் கோவிலுக்குள் செல்லப் படாதென்று தடுப்பது பாபமாகுமென்ருர். சேர வாரும் ஜகத்தீரே என்று அழைப்பதே மேன்மை கொள் சைவநீதி உலகமெல்லாம் விளங்க வழியென்றும், இதுபற்றி யாருக்கும் ஏதும் சந்தேகமிருந்தால் அதைத் தீர்க்ககத் தாம் எப்போதும் தயாராக இருப்பதாகவும் தெரிவித்தார்.

இங்கு கல்லூரி, சர்வகலாசாலை மாணவ மாணவிகள், ஆசிரியர்கள் முதலியவர்களின் கூட்டங்களில் பேசி அவர்களது சந்தேகங்களைத் தீர்க்கவும் சைவசமயத்தின் மாண்பினை விளக்கவும் ஆவலுடன் உள்ளார்கள்

நல்லூரிலுள்ள ஆதீனக் கிளை மடத்திலே சுவாமிகள் தங்கியிருக்கிருர். விரும்புபவர்கள் அவரைச் சந்தித்துப் பயன்பெறலாம்.

0 0 0

வாழ்க அந்தணர் வானவர் ஆனினும், வீழ்க தண்புனல் வேந்தனும் ஓங்குக,
ஆழ்க தீயதெல்லாம் அரன் நாமமே, சூழ்க வையகமும்துயர் தீர்கவே.

— திருஞானசம்பந்த சுவாமிகள்

# மறப்பது எப்படி?

'கொழும்பிலிருந்து 'கோல்' '.

டெலிபோனுக்கு பொறுப்பாக இருந்தவர் றிசீவரை கையில் வைத்துக்கொண்டு சொல்கிருர்.

றிசீவரை ஒரு கையில் எடுத்துக்கொண்ட செய்தி ஆசிரியர் மறுகையில் பேனுவை எடுத்து செய்தியெடுக்க ஆயத்தமாகிருர். சிறிது நேரத்தில் அவரது கையிலிருந்துபேனுசோர்ந்து நழுவுகிறது. அவர் எழுத வைத்திருந்த காகிதத்தில் கண்ணீர் சொட்டுக்கள் சோகமாக எதையோ எழுதுகின்றன. ஒன்றும் விளங்காத நான் மௌனக்குரல் கொடுக்கிறேன். 'டாக்டர் சண்முகரத்தினம்...' அவரது கண்ணீர் மிகுதிக் கதையை சொல்லி முடிக்கிறது.

மனித உடல் சாம்பராகி விடுகிறது. ஆனுல் நல்ல மனிதனின் மனத்துடன்

நான் 'ஈழநாடு' காரியாலயத்தில் சேர்ந்து இரண்டரை மாதங்களிருக்கும். அப்போது திருமணமாகாதிருந்ததால் சம்பளத்தைப்பற்றி அதிக அக்கறை காட்டவில்லை. ஏதோ ஒரு வேலைசெய்துகொண்டிருக்கின்றேன்என்ற திருப்தியில் கருமமாற்றினேன். டாக்டர் சண்முகரத்தினம் என்முன் வந்தார். 'என்ன வேலையெல்லாம் ஒழுங்காகச் செய்கிறீரா' அவர்கேட்ட கேள்விக்கு ஊழியனுக்குத் தேவைப்படும் மௌனத்துடன் பதிலளித்தேன்.

அவரது காற்சட்டைப் பொக்கெட்டினுள் கை நுழைந்தது. 'இந்தாரும்' வெள்ளை மனத்தின் இரக்கம் ஊறிய அந்தக்கையிலிருந்து என்கைக்கு ஒரு தாள் மாறியது. 'ஐம்பது' 'இது கொம்பனி பணமல்ல. அந்த கணக்கில் இதுசேராது. இது என் சொந்தப்பணம்'.

ஒருமுறை பார்த்துவிட்டுச் சென்ருல் அவர் சென்ற சில நிமிடங்களில் ஊழியர்களைத் தேடி தேநீரோ, காப்பியோ வரும். கண்டிப்புக்காட்டும் அவர் வார்த்தைகளுக்கும் இதயத்துக்கும் சம்பந்தமில்லையென்பதை அறிய எனக்கு வெகு நாட்கள் பிடித்தது.

ஏதோ ஒரு மனக்கோளாறு எனக்கு ஒருமுறை ஏற்பட்டது. கம்பனியிலிருந்து ராஜினுமா செய்துவிடவேண்டும் என்ற முடிவுடன் காகிதத்திலும் எழுதிவிட்டேன். சண்முகரத்தினத்தாரை நோக்கி காகிதத்துடன் விரைந்தேன். அவர் கையில் காகிதத்தை ஒப்படைத்துவிட்டேன். காகிதத்தை ஒருமுறை பார்த்தார், என்னை ஒருமுறை பார்த்தார். தமக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தால், அந்தப் பண்பின்படி அறவாழ்க்கை வாழ்ந்து வரின், இவ்விதமானகேடு இந்தச்சமுதாயத்துக்கு ஏற்பட்டிருககமுடியாது. இனி என்னவோ என்று ஏங்கித் தவிக்கவும் தேவையில்லை. வும், தமிழும் சைவமும் மீண்டும் மேல்நிலையடையவும்வழி பிறப்பது உறுதி. இதற்கு நல்லூரில் மீண்டும் கோயில் கொண்ட நாவலர்பெருமான் துணைநிற்பாரென்று நம்புவோம்.

## ஒரு பெரிய குறை

மதுரை ஆதீன குருமகா சந்நிதானமவர்கள் பலாலி விமான நிலையத்தில் இறங்கிய போது, பொதுமக்கள் பலர் அவரை சமய மரியாதைகளுடன் வரவேற்றனரென்றாலும், அவர் மற்ற பிரயாணிகளைப் போலவே சுகாதார அதிகாரி, பொலிஸ் அதிகாரி, சுங்க அதிகாரிகள் முதலியவர்களிடம் செல்லவேண்டியிருந்தது இந்த ஏற்பாடு சமயத்தலைவரான அவருக்கோ, இங்குள்ளதமிழ் சைவ சமூகத்தினருக்கோ பெருமையளிக்கக் கூடியதாயில்லை.

கொழும்பு விமான நிலையத்துக்கோ, அல்லது கட்டுநாயகா நிலையத்துக்கோ வெளி நாடுகளிலிருந்து இவ்வித வணக்கத்துக்குரிய பெருந்தலைவர்கள் வருகை தரும்போது, ''வி. ஐ. பி.'' என்ற முக்கியஸ்தர்களை வரவேற்பதற்கான தனி இடம் அமைத்துள்ளனர். விமானத்திலிருந்து இறங்கியதும், அவர்களை நேரே அந்த இடத்துக்குஅழைத்துச் சென்று விடுவர். சுகாதார, சுங்க பாஸ்போர்ட் பரிசிலனையிலிருந்து அவர்களுக்கு விலக்கு அளித்து விடுவர். அவசிய கையெழுத்துக்களை அதிகாரிகள் அவரிடமே வந்து வாங்கிக் கொள்வர்

அதேமாதிரி வசதிகளை யாழ்ப்பாணம் பலாலி விமான நிலையத்திலும் செய்ய வேண்டியது அவசியமாகும். யாருக்கு இவ்வித சலுகைகள் அளிக்க வேண்டுமென்ற சந்தேகம் எழலாம். இதைப் பற்றி தீர்மானிக்கும் அதிகாரத்தை அரசாங்க அதிபருக்கு அளித்து துஷ்பிரயோகம் ஏற்படாமல் தடுக்கலாம். பலாலியும் அதிக முக்கியம் வாய்ந்த விமான நிலையம் ஆகிவருவதாலும் பலபிரமுகர்கள் பலாலி வழியாக வருவதாலும், இந்தப் பெரிய குறையை நீக்க தமிழ் எம். பி. மார்கள் உடன் முயற்சி எடுப்பது அவசியமாகும். எக்காரணம்பற்றியும் பிரதமர் இதை மறுக்க முடியாது.

## நிக்ஸனின் சுற்றுலா

அமெரிக்க அதிபர் திரு. ரிச்சார்ட் நிக்ஸன் அடுத்த மாத பிற்பகுதியிலும் ஆகஸ்ட்மாத முற்பகுதியிலும் இந்தியா, பாகிஸ்தான் உட்பட ஆசியநாடுகள் சிலவற்றுக்கும் கிழக்கு ஐரோப்பிய நாடுகளில் ஒன்றான ரூமேனியாவுக்கும் விஜயம்செய்யவிருக்கிறார். ஆசியநாடுகள் சிலவற்றுக்கு அவர் செல்வதுபற்றி எவரும் எதுவும் சொல்லவில்லை. ஆனால் கம்யூனிஸநாடான ரூமேனியாவுக்கு அவர் போவதுபற்றிப் பல நாடுகளிலும் வியப்புத் தெரிவிக்கப்பட்டிருப்பதுடன் சில இடங்களில் இந்த விஜயம்பற்றி பல்வேறு விதமாக வியாக்கியானமும் செய்யப்படுகிறது.

அவநம்பிக்கை, அச்சம், தப்பெண்ணங்கள் இருக்கும்வரை இப்படியான வியாக்கியானங்கள் வந்து கொண்டே இருக்கும். திரு. நிக்ஸன் ரூமேனிய அதிபரின் அழைப்பின் மீது செல்வதாகவே கூறப்படுகிறது. ரூமேனியாவுடன் மட்டும் நின்றுவிடாது சோவியத்யூனியன், நவசீனு ஆகிய நாடுகளுக்கும் அதிபர் நிக்ஸன் செல்ல வேண்டும். சோவியத் தலைவர்களையும் நவசீனத் தலைவர் மாசேதுங்கையும் அவர் அமெரிக்காவுக்கு அழைக்கவும் வேண்டும். உலக நாடுகளின் தலைவர்கள் அடிக்கடி பல நாடுகளுக்கும் சென்று நேரில் சந்தித்துப் பேசிவந்தால் நாடுகளுக்கிடையிலும் தலைவர்களுக்கிடையிலும் நிலவும் அச்சமும் அவநம்பிக்கையும் தப்பெண்ணங்களும் நீங்கவும் உலகில் அமைதியும் உலக நாடுகள் வளர்ச்சியடையவும் வழி பிறக்கும்.

ரத் திருமுறைகள் வழக்கு அருகி மறைந்து போயின. சோழப் பேரரசர் ஒருவர், திருமுறைகள் மண்ணால் மூடுண்டு சிதம்பரத்திலே ஓரிடத்தில் மறைவாய் இருப்பதைத் திருவருளின் தூண்டுதலால் அறிந்து, அப்பர், சம்பந்தர் சுந்தரர் மூவரையும் விசேட ஆராதனை நடாத்தி, அவ்விடத்துக்குப் பவனிவரச் செய்து வேண்டுதல் செய்து நின்றார். அக்காலத்துக்கு வேண்டுவன வாகிய தேவாரத் திருப்பதிகங்கள் வெளிப்பட்டன. சைவ உலகு புத்துணர்ச்சிஎய்தியது. வெளிப்பட்டன வாகிய தேவாரங்களின் கனிவே பெரியபுராணமாகிய தெவிட்டாது தித்திக்கும் அமிர்த ஊற்று.

இன்று பலவேறு துறைகளும் மூடுண்டு வழி புலப்படாது முட்டுற்று நிற்கும் நிலை நேர்ந்திருக்கின்றது. ஒவ்வொரு துறையிலும் தட்டின்றிச் செல்லுதற்குரிய வழியை--நீதி யாகிய நேர் வழியை நாவலர் பெருமான் முன்னமே வகுத்து வைத்திருக்கின்றார். நமக்கு வழி செய்வனவாகிய நாவலர் பெருமானின் கருத்துக்களிற் பெரும்பாலானவை நூல் வடிவில் வெளிவந்தவை, நமது கவனக் குறைவால் அவை மறைந்து கிடக்கின்றன. நாம் மறந்துவிட்டோம்.

நம்மிடஞ் சிறிதே தவம் இருந்ததனாற் போலும், நாவலர்பெருமானின் ஆத்மசக்தி நமக்கிரங்கி நமக்கு வழிகாட்டும் பொருட்டு நம் முன்னிலையில் உதயஞ் செய்திருக்கின்றது. தண்ணிய கலா கிரணங்களைப் பரப்பிக் கொண்டு பரிபூரண சந்திரனாய் இங்கே உதயஞ் செய்திருக்கின்றது. உயர்ந்த இராஜோபசாரங்களுடன் இலங்கைத் தலைநகரிலிருந்து புறப்பட்டு, வீதிகள்தோறும் திருவுலாச் செய்து, புஷ்பாஞ்சலிகளும் புகழ் மாலைகளும்பெற்று இங்கே எழுந்தருளியிருக்கின்றது. தமிழரசர்கள் அரசு புரிந்த யாழ்ப்பாணத்துக்கு எழுந்தருளியிருக்கின்றது. தமிழரசர்களின் இராஜதானியாய் விளங்கியதும்; நாவலர் பெருமான் அவதரித்ததும் தமிழ் முருகு அரசுவீற்றிருப்பதுமான நல்லூரை நோக்கி எழுந்தருளி யிருக்கின்றது.

அன்று சோழப் பேரரசர் தேவார முதல்வரைப் பவனிவரச் செய்து, தரிசிக்க வைத்தது போல, நமது உயர் நீதிமன்ற நீதியரசர் அவர்கள் இன்று மாலையில் திரைநீக்கஞ் செய்து நாவலர் பெருமானை யாவரும் என்றும் தரிசிக்க வைப்பார்கள்.

டன் பதினன்கு வருடம் நெருங்கிப்பழகி, அப்பெருமானின் நீதிக்குத் தலைவண

பெருகுவதாக.



# அவர் வாழ்கிறார்

இந்த உலகில் தோன்றுபவர்கள் யாவரும் வாழ்ந்ததில்லை. ஆனால் ஒருசிலர் என்றும் வாழ்ந்து கொண்டேயிருக்கிறார்கள். அத்தகைய புகழ் வாய்ந்தவர்களில் ''ஈழநாடு'' பத்திரிகையின் ஸ்தாபகர்களில் ஒருவரும் சித்த ஆயுள்வேத வைத்தியத்திலே தலைசிறந்து விளங்கியவருமான டாக்டர் கே. சி. சண்முகரத்தினமுமொருவர். 1966-ம் ஆண்டு ஜூன் 30-ம் தேதி தனது சேவையை மக்கள் வேண்டி நின்ற நேரத்தில் அவர்களை ஆற்றொணுத் துயரத்துக்குள்ளாக்கிவிட்டு மறைந்துவிட்டார்.

தனதராம்பக் கல்வியை யாழ். இந்துக்கல்லூரியில் கற்றடாக்டர் வைத்தியக்கல்வியைச் சென்னை வைத்தியக் கல்லூரியில் கற்றார். ஆங்கு வைத்தியக் கல்விகற்றுக் கொண்டு இருக்கும்பொழுது டாக்டர் நாட்டின்சுதந்திரப் போராட்டத்திலும் பங்கு கொண்ட தாடு இலங்கையிலிருந்து அங்கு சென்ற அரசியல்தலைவர்கள் பெரியார்கள் யாவரையும் அன்போடு உபசரித்தார்.

வைத்தியக் கல்வியை முடித்துக்கொண்டு நாடு திரும்பிய டாக்டர் சண்முகரத்தினம், யாழ்ப்பாணத்தில் தனது பிறப்பிடத்தில் வைத்திய நிலையமொன்றை நிறுவி மக்களுக்குப் பெருந்தொண்டாற்றினர்.

வைத்தியத் தொழிலை விஸ்தரிக்க விரும்பிய டாக்டர் மருந்துகள் உற்பத்தி செய்வதற்கு நவீன இயந்திரங்களை இறக்குமதிசெய்தார். சித்த ஆயுள்வேத மருந்துகளை நவீன முறையில் தயாரிப்பதற்கு அடியெடுத்து வைத்த பெருமை இவரையே சாரும். இதனுல் அன்னிய செலாவணியை நாடு சேமிக்க அவர் உதவினுர் எனவும் கூறலாம். மருத்துவத்துறையில் நினைத்ததை யெல்லாம் செயல்படுத்தமுன் அவர் இவ்வுலகைவிட்டு மறைந்தமை நாட்டுமக்களுக்கு ஒரு பேரிழப்பாகும்.

1962-ம் ஆண்டு பண்டாரநாயக்கா ஞாபகஆராய்ச்சி நிறுவனம் நிறுவப்பட்டபோது அங்கு கண்காட்சிக்கு சித்த மருந்துகளையும் ஏடுகளையும் அளித்துப் பெரும் பாராட்டையும் பெற்றார்.

1964-ஆண்டு ஏற்பட்ட கடும் சூருவளியால் பாதிக்கப்பட்டமக்களுக்குத் தனது உடல் பொருள் ஆவி அத்தனையையும் அர்ப்பணித்து இரவு பகலென்றும் பாராது உதவிசெய்தார்.

டாக்டரின் சேவையில் நாம் என்றென்றும் மறக்க முடியாதது, 'ஈழநாடு' பத்திரிகையை ஸ்தாபித்து தமிழ் சமூகத்துக்கு ஆற்றிய மாபெரும் தொண்டாகும். இவரது தமையனுர் கே. சி. தங்கராஜாவின் நீண்டநாளைய ஆசை ஒரு தமிழ் பத்திரிகையை யாழ்ப்பாணத்தில் நடாத்தவேண்டுமென்பதாகும். அவர் 'ஈழநாடு' பத்திரிகையை ஸ்தாபிப்பதற்கு பெரும் உதவியாகவிருந்து அப்பத்திரிகையை நடத்திவந்தவர் டாக்டரேயாவார்.

செல்வி நா. பரமேஸ்வரி.

ரது கண்ணீர் மிகுதிக் கதையை சொல்லி முடிக்கிறது.

மனித உடல் சாம்பராகி விடுகிறது. ஆனுல் நல்ல மனிதனின் மனத்துடன் நாம்கொண்டிருக்கும் நல்லுறவு சாம்பராகுவதில்லை. அது அணையாது எரிந்து கொண்டுதானிருக்கிறது.

சண்முகரத்தினம் இல்லாமல் மூன்று தடவை இந்த பூமிசூரியனைச் சுற்றிவந்துவிட்டது. ஆனுல் அவரது நினைவுகள் நம்மைச்சுற்றியே நிற்கின்றன.

கொழும்பிலிருந்து 'திரு. சண்முகரத்தினம் பிரிந்துவிட்டார்' என்ற செய்தி கேட்டு இன்று மூன்று வருடங்கள். எனினும் அந்தத் துயரநாள் மீண்டும் வரும்போது அந்த அதிர்ச்சிச் செய்தியின் நினைவும் மீண்டும் வந்துதான் செல்கிறது.

நிழல்தந்து கொண்டிருந்த பெருமரம் சாய்ந்துவிட்டால் அந்த நிழலில் ஒதுங்கியிருப்பவர்கள் மனம் தளர்வது இயற்கைதான். 'ஈழநாடு' ஊழியர்களுக்கு திரு. சண்முகரத்தினம் அவர்கள் பிரிவு இது போன்றதுதான்.

வேலைவாங்கிவிடுவதுதான் முதலாளியின் தொழில். அதற்குப் பிறகு தொழிலாளியின் உடல்நிலை அவனது குடும்பம் இதுபற்றியெல்லாம் சிந்தித்துவிட்டால் அந்த 'முதலாளி' என்ற சொல்லின் மகத்துவம் கெட்டுவிடும் என்பது பற்றி சண்முகரத்தினம் அறிந்து வைத்திருக்கவில்லை. அவரது நினைவு மீண்டும் மீண்டும் சுற்றி வருவதற்கு இதுவும் ஒரு காரணம்.

யாருடைய முகத்திலாவது சாடையாக தாடி வளர்ந்திருந்தால்கூட. அவருக்குப்பிடிக்காது. ''என்ன, என்ன சங்கதி? ஏன் இப்படி தாடி வளர்க்கவேண்டும்? எல்லாருக்கும் ஒவ்வொரு கவலை இருந்து கொண்டுதானிருக்கும். அதற்காக இப்படி வெளியே காட்டிக் கொள்ளவேண்டுமா? முதலில் முகத்தை 'கிளீனுக' வைத்துக்கொள்ளும். அதற்குப் பணம் வேண்டுமா?'' அவரது காற்சட்டை பொக்கெட்டிலிருந்து ஏதோ ஒரு தாள் வெளிக்கிடும்.

மேடையில் பேசத்தெரியாதவர். ஆனுல் பேசாமலேயே சில காரியங்களை தோல்வியில் முடியும் என்று தெரிந்தும் தைரியமாகச் செய்தவர் அவர். இந்தத் தைரியம்தான் அவர் பிரச்னைகளை நெஞ்சுக்குள்ளேயேவைத்து சமாளிக்கும் திறமையை அவருக்குக் கொடுத்திருக்கவேண்டும்.

கம் ஊறிய அந்தக்கையிலிருந்து என்கைக்கு ஒரு தாள் மாறியது. 'ஐம்பது' 'இது கொம்பனி பணமல்ல. அந்த கணக்கில் இதுசேராது. இது என் சொந்தப்பணம்'.

எந்த முத்திரையிலும் நான் இதற்காக கையெழுத்துப்போடவில்லை. ஆனுல் நெஞ்சத்தில் இது என்றுமே அழியாதுபதிந்திருக்கும் ஒரு நிகழ்ச்சி. மறைந்தவரைப் பற்றி புகழ்வது சம்பிரதாயம் என்பதற்காக குறிப்பிடவில்லை. சோறுபோட்ட கையை மறக்கமுடியாமலிருக்கிறது.

தானே ஏதேதோ திட்டங்களைப்போட்டுக் கொண்டு சுயமுயற்சியால் உயர்ந்தவர் அவர். ஆனுல்வளர்ந்துவந்த இடம், எப்படி இருந்தேன் என்பதை 'சம்பளம்கொடுப்பவன் நான், சம்பளம் வாங்குபவனுக்கு இதெல்லாம் எதற்கு' என்று கொஞ்சமும் சிந்தியாமல் சாதாரணமாக கூசாமல் எடுத்துக்கூறக் கூடிய தைரியசாலி அவர்.

அவரது காரில் பக்கத்தில் இருத்தி என்னை இருதடவைகள் கூட்டிச் சென்றிருக்கிறார். உள்ளத்தால் பெரிய மனிதனுக்கு பக்கத்தில் இருந்து செல்வது எனக்கு ஏதோ சங்கடமாக இருந்ததை அப்போது அவதானித்த அவர் சமுதாயத்தில் ஒவ்வொருவனும் முன்னுக்கு வரவேண்டும் என்ற தனது பரந்தநோக்கத்தை பகிரங்கமாக என்னிடம் கூறினுர். தனது துணிச்சல் பிறரைக் கோழையாக்கி வைக்காது அது பிறரையும் துணிச்சல் காரர்களாக ஆக்கவேண்டும் என்பதுதான் அவரது மனத்திட்டமாக இருந்திருக்க வேண்டும்.

சண்முகரத்தினம் என்ற அழகான பெயர்கொண்ட அவருக்கு அழகில் அளவுகடந்த பிரியம் கசங்கிய ஷேர்ட்டை அவர் விரும்புவதில்லை. அந்தஸ்தை வெளிப்படுத்துவதற்காக அல்ல அழகு இதயத்துக்கு ஒரு சுகம் கொடுக்கிறது என்பதை வைத்தியரான அவர் நன்கு அறிந்துவைத்திருந்தார். எல்லோரும் கம்பீரதோற்றத்துடன் காட்சியளிக்க வேண்டும் என்பது அவர் விருப்பம். அவரது மேசைமேல் மலர்ந்து விரிந்து கிடக்கும் மலர்கள் அவரது முகத்தைப்போல் பிறரைக் கவரும்.

இரவில் வேலைசெய்வதென்பது எவ்வளவு கடினமான காரியம் என்பதை உள்ளூர அவர்நன்கு உணர்ந்திருந்தார். இவ்வித நேரத்தில் காரியாலயத்தில் வேலை செய்யும் ஊழியர்களை அவர்

நினைத்தாரை நோக்கி காகிதத்துடன் விரைந்தேன். அவர் கையில் காகிதத்தை ஒப்படைத்துவிட்டேன். காகிதத்தை ஒருமுறை பார்த்தார், என்னை ஒருமுறை பார்த்தார். தமக்கு முன்னுல் போடப்பட்டிருந்த ஆசனத்தில் அமரும்படி கூறினுர். அவரிடமிருந்த மரியாதையின் எடையைக் குறைக்க என்னுல் முடியவில்லை. கதிரையின் மேல் விளிம்பில்பிடித்தபடி நின்றேன்.

அவருடன் நடைபெற்ற சம்பாஷணையின் விபரம் இதுதான்:

'வேறு வேலை தேடி விட்டீரா'?

எனது பதில்: இல்லை, தேட முயற்சிசெய்துவருகிறேன்.

'அப்பொழுது இப்ப போய்வேலையைப்பாரும்'

பதில்: 'நான் விலகப் போகின்றேன்'.

நீர் இதைவிட நல்லஇடத்துக்குப்போவதாக இருந்தால் சொல்லும் நானே முயற்சிசெய்து அதை எடுத்து தருகிறேன்.'

இதற்குப்பிறகு எனது வார்த்தைகள் வற்றிப்போய் விட்டன.

ராஜினுமாபற்றி நான் எழுதிய கடிதம் டாக்டரின் இரு கைகளாலும் எத்தனையோ முறை மடிபட்டது வலது கையால் அந்தக் கடிதம் குப்பைக்கூடையுள் சேர்க்கப்பட்டது.

வேலையில்லாத் திண்டாட்டம் அப்பொழுதும் இருந்து கொண்டுதானிருந்தது. அது திரு. சண்முகரத்தினத்துக்கும் தெரியும்.

யாரையும் நடுத்தெருவில் விடவிரும்பாத டாக்டர் சண்முகரத்தினம் எல்லோரையும் இடைநடுவில் விட்டு சென்றுவிடவேண்டுமென்பது எதற்காக வகுக்கப்பட்ட விதியோ! வருடங்கள் தேய்ந்துவிடலாம். ஆனுல் நினைவைத்தேய்ப்பது எப்படி?

—கணேஷ்

## மரண அறிவித்தல்

எனது தாயார் க. செல்லமுத்து அவர்கள் 29-6-69-ல் காலமாகிவிட்டார். அன்னாரின் பூதவுடல் இன்று (30-6-69) காலை 10 மணிக்கு அவரது இல்லத்திலிருந்து கோம்பையன்மணல் மயானத்திற்கு ஈமக்கிரியைகளுக்காக எடுத்துச்செல்லப்படும். உறவினர்களும், நண்பர்களும் இவ்அறிவித்தலை ஏற்றுக்கொள்ளவும், க. சித்திரவேல், பாடகன், அச்சகத் தொழிலாளன், 62, அரசடி வீதி, யாழ்ப்பாணம்.

1051

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலை வீதி 63ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1969ம் ஆண்டு ஜூன் மாதம் 30ம் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org